விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி

Valampurii
பக்கங்கள்: பதினாறு
சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 16 ஞாயிற்றுக்கிழமை (28.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 71

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## பிரபாகரன், பொட்டுஅம்மான் தலைமறைவு

# ராஜீவ் காந்தி கொலை வழக்கை ஒத்திவைத்தது இந்திய நீதிமன்றம்



(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டுஅம்மான் ஆகியோர் தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவித்து இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கை இந்திய நீதிமன்றம் ஒன்று மே மாதம் வரை ஒத்திவைத்துள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)



## வன்னி மாவட்டத்துக்கு தாக்கல் செய்த மூன்று கட்சிகளின் மனுக்கள் நிராகரிப்பு

(வவுனியா)

வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கென விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி, ஈழ தேசிய ஜனநாயக முன்னணி, அனைவரும் மக்கள் அனைவரும் மன்னர்கள் கட்சி ஆகிய கட்சிகள் தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்த யோகரட்ணம் யோகி செயலாளராக நியமிக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியும் காலை 11.56 மணியளவில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தது.

ஈழ தேசிய (16 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு தலையீடுகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது

### ஹெகலிய ரம்புக்வெல அறிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது என அரசாங்கப் பாதுகாப்புப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இலங்கையை இன்னமும் காலனித்துவ நாடாக கருதி பிரித்தானியா செயற்பட்டு வருகிறது. எனினும் பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் டேவிட் மிலிபாண்ட் இலங்கை மக்களின் உரிமை (16 ஆம் பக்கம் பார்க்க)

## புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தினருடன் இணைந்து செயற்பட அமெ.விருப்பம்

(கொழும்பு)

பிரித்தானியாவில் நடைபெற்ற உலகத் தமிழர் பேரவையின் மாநாட்டின் வெற்றிக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் புலம்பெயர் தமிழ் சமூகத்துடன் ஒருங்கிணைந்து செயற்பட அமெரிக்கா விருப்புவதாக அமெரிக்காவின் கிழக்கு, மத்திய மற்றும் தென்னாசிய பிராந்திய வெளிவிவகார உறவுகளுக்கானத் துணைக்குழுவின் தலைவர் செனட்டர் பொன்கசே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு,

அமெரிக்காவின் தெற்காசிய வெளிவிவகார உறவுகளுக்கானத் துணைக் குழுவின் தலைவராகிய நான் (16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்களின் தேசியப் பட்டியலை அந்தக் கட்சி வெளியிட்டுள்ளது.

இப் பட்டியலில் தேர்தல் ஆணையாளரிடம் கையளித்துள்ளனர். தேசியப் பட்டியலில் தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம் வருமாறு,

மதியாபரணம் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கு எதிரான சாட்சிகள் தயாரானதும் விசாரணை ஆரம்பம்!

### இராணுவப் பேச்சாளர் அறிவிப்பு

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக சாட்சிகள் தயாரிக்கப்பட்டு அறிக்கை அளிக்கப்பட்டதன் பின்னர் இராணுவச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

சாட்சியங்கள் தயாரான பின்னர் சரத் பொன்சேகாவுக்கு எதிரான குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படும். இதன் பின்னர் பொன்சேகா மிக (16 ஆம் பக்கம் பார்க்க)

## அரச பயங்கரவாதம் தொடரும்போது புலிகளின் பயங்கரவாதம் பேச முடியாது

### அருட்தந்தை இம்மானுவேல் அறிக்கை

(கொழும்பு)


இலங்கையின் அரச பயங்கரவாதம் தொடர்கின்ற நிலையில் விடுதலைப்புலிகளின் பயங்கரவாதம் குறித்துப் பேசுவது அர்த்தமற்றது என உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை இம்மானுவல் அடிகளார் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியலில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இடையிலான கருத்து முரண்பாடுகள் கவலையளித்திருப்பதாகவும் இந்தக் கட்சியினர் தமது குறிக்கோளில் உறுதிப்பாட்டில் உள்ளார் (16 ஆம் பக்கம் பார்க்க)

TCN EXPRESS INTERNATIONAL
உள்நாட்டு வெளிநாட்டு துரித பொதிகள் தபால்கள் சேவை
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிக்கான தபால்கள் பொதிகள் சேவை
குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
திருமுருகன் கொம் நெற்
லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா வீதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம்,வீதி, திருநெல்வேலி. (ந.ப.நோ.சங்கம் முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி.(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்
(C-4523)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பேசும் படம்




யாழ்ப்பாணத்தில் இந்த நிலை....!

# யாழ்.சிறைச்சாலையிலிருந்த இரு கைதிகள் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கைகலப்பில் இரண்டு கைதிகள் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் சந்திரகுமார் (வயது 28), சஞ்சயன் (வயது 20) ஆகிய கைதிகளே காயமடைந்துள்ளனர்.

சிறைச்சாலை அறைகளில் கைதிகள் கைத்தொலைபேசி உள்ளிட்ட பொருட்களை வைத்துள்ளார்களாஎன சோதனையிட்டபோதே இக்கைகலப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

எனினும் கைதிகள் தங்களைத் தாங்களே பிளேட்டுக்களால் வெட்டிக் காயப்படுத்தியதாகத் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர். (ச-5.14,30)

# கடந்த இரு மாதங்களில் 17 பேரை காணவில்லையாம்

2010 ஜனவரி முதலாம் திகதி முதல் பெப்ரவரி 23ஆம் திகதி வரையான ஒரு மாத காலத்தில் பொது மக்கள் காணாமல் போனமை தொடர்பாக 17 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவற்றில் 8 முறைப்பாடுகள் ஜனவரி மாதம் கிடைத்துள்ளன.ஏனைய முறைப்பாடுகள் பெப்ரவரி மாதத்தில் பதியப்பட்டுள்ளன.கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளில் அதிகளவான முறைப்பாடுகள் வடக்குகிழக்கு மாகாணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இவர்களில் சிலர் உறவினர்களின் வீடுகளில் இருந்த நிலையில் கண்டறியப்பட்டுள்ளனர்.17 முறைப்பாடுகளில் ஊடகவியலாளர் பிரகீத் ஹெக்நேலியகொட மற்றும் புத்தளம் மாவட்டத்தின் அரசசார்பற்ற நிறுவன செயற்பாட்டாளரான ராசீக் என்பவரும் அடங்குகின்றனர். (ச-5)

## முதுகற்கை நெறி வாய்மொழிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பிராந்திய திட்டமிடல் முதுகற்கை நெறி மாணவர்களின் வாய்மொழி மூலப் பரீட்சை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஒருமணிக்கு நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு தோற்றவிருக்கும் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம் தருமாறு இணைப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார். (ச-14)

## ஓய்வு பெற்ற 4இராணுவ அதிகாரிகள் சிறையில் உண்ணாவிரதப் போராட்டம்

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் இணைந்து அரசாங்கத்தை கவிழ்க்க சதித்திட்டம் தீட்டியதாக குற்றம் சுமத்தப்பட்டு கைதுசெய்யப்பட்டு பயங்கரவாத விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 4ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் கடந்த புதன் கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேஜர் ஜெனரல் நிசாந்த மல்லவராச்சி, மேஜர் விஜித கொடிப்பிலி, மேஜர் பிரசன்ன அத்தநாயக்க, லெப்டினன்ட் சமரகோன் ஆகியோரே இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுடன் கைதுசெய்யப்பட்ட ஏனைய 19முன்னாள் இராணுவத்தினர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எனினும் இந்த 4 முன்னாள் அதிகாரிகளும் அரசாங்கத்தை கவிழ்க்க சதித்திட்டம் தீட்டியதாக குற்றம்சுமத்தப்பட்டு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ச-5)

## சடலத்தை அடையாளம் கண்டு பொறுப்பேற்குமாறு அறிவிப்பு

வசாவிளான் பலாலி தெற்கை நிரந்தர முகவரியாகவும்,கற்பகப் பிள்ளையார் கோவிலடி உரும்பிராயை தற்காலிக முகவரியாகவும் கொண்ட இராமலிங்கம் சுப்பிரமணி யம் என்பவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 5அடி உயரம், கறுப்பு நிறம்மற்றும் இது கால் இல்லாதவர் என அடையாளங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அடையாளம் கண்டு சடலத்தை பொறுப்பேற்கும் படி யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## யாழ்.வணிகர் கழகத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வணிகர் கழகத்துக்கு புதிய நிர்வாகத்தினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இத் தெரிவு இடம்பெற்றுள்ளது. இதில் தலைவர்: ஜெயசேகரம், செயலாளர்: ஜனக்குமாரன், பொருளாளர்: ஜெயராசா, உபதலைவர்: இ.எஸ்.பி.நாகரத்தினம், உபசெயலாளர்: சிவகுமாரன் இவர்களைவிட 14 அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச)


**Piano / Violin NOTES**

Organ,Guitar,வயலின்,புல்லாங்குழல்,வீணை போன்ற இசைக் கருவிகளுக்கான 300 சினிமாப் பாடல்களின் Notes விற்பனைக்குண்டு. Organ,Guitar,புல்லாங்குழல் பயிற்சி வகுப்புகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

KARAVEENA ISAI MANRAM
75, TEMPLE ROAD, NALLUR. T.P.No.:0777031293 (414)

**கோகுல் ரவல்ஸ் Hokul Travels**









திருமண வைபவங்களுக்கான குளிரூட்டப்பட்ட சொகுசு கார், வான் மற்றும் பஸ் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:-
021 222 8984, 077 3747825, 077 6152992
(C-4449)

'ஜெய் குருதேவ்'



ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்

**வாழும் கலை பயிற்சி ஸ்ரீஸ்ரீ யோகா**

உலகில் பல கோடி மக்களின் வாழ்க்கையில் பல அற்புதங்களை நிகழ்த்திய வாழும் கலை பயிற்சி-ஸ்ரீஸ்ரீ யோகா மீண்டும் யாழ்ப்பாணத்தில்

◎ **தியானம்**

◎ **யோகாசனம் உள்ளடக்கியது**

நமது ஆறாவது அறிவை தூண்டுவதோடு நரம்பு மண்டலங்களை உற்சாகப்படுத்தி உடம்பில் உள்ள அத்தனை உறுப்புக்களையும் செயற்பட வைக்கிறது.

இந்த அரிய வாய்ப்பினை அனைவரும் பயன்படுத்தி வாழ்க்கையில் எல்லா வளமும் நலமும் பெற அனைவரையும் அன்போடு அழைக்கிறது வாழும் கலைக் குடும்பம்-யாழ்ப்பாணம்

**ஸ்ரீ ஸ்ரீ யோகா**

இடம்:- கம்பன் கோட்டம்-நல்லூர்
பயிற்சி நாட்கள்:- 01.03.2010 (திங்கட்கிழமை) முதல் 05.03.2010 வரை
நேரம்:- மாலை 4.30-6.30 மணிவரை

குறிப்பு:- 14 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இப் பயிற்சியில் பங்குபற்றலாம்.

மேலதிக விபரங்களுக்கு :

வாழும் கலை அற நிறுவனம்-யாழ். மையம்.

T.P.: 021 222 7030, 077 1777998 (490)

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உங்கள் வீடுகளுக்கே வந்து உடன் திருத்தித் தருகிறோம்.

(Computer Repair)

அழையுங்கள்

077 1329513 (808)

**சேவை முகவர் விற்பனைக்கு**

நாவலர் றோட், மருதடி வீதி, கச்சேரி நல்லூர் றோட், கந்த புராண லேன், அம்மன்றோட், ஆடியபாதம் வீதி, பருத்தித்துறை வீதி, 3ஆம் கட்டையடி கட்டப்பிராய், கோண்டாவில், உரும்பிராய் சந்திக்கு அண்மையில் (9 பரப்பு) விற்பனைக்கு உண்டு. வாங்க,விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: சுந்தரம்

T.P.: 222 9177 (809)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பேராசிரியர் அ.துரைராசா தங்கப்பதக்கம்

பேராசிரியர் அ.துரைராசா தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு 2002/03, 2003/04, 2004/05 ஆகிய கல்வியாண்டு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை:** எதிர்வரும் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறவிருக்கும் முதலாம், இரண்டாம் (மேற்பிரிவு) வகுப்புக்களில் சித்தியடைந்தவர்கள்.

**விண்ணப்பப்படிவங்களை**

1. உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
2. சிரேஷ்ட உதவிப் பதிவாளர், வவுனியா வளாகம், வவுனியா ஆகிய முகவரிகளிலும்
3. www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தள முகவரியிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்

விண்ணப்பப்படிவங்களில் வழங்கப்படும் விபரங்களுக்கான தகுந்த சான்றாதாரங்களின் பிரதிகள் விண்ணப்பப்படிவங்களுடன் இணைக்கப்படல் வேண்டும்.

**விருதுகள்:** பல்கலைக்கழக மட்டத்தில் சகலதுறைகளிலும் சிறப்பாக செயற்பட்டமைக்காக ஒரு பதக்கமும், பீட மட்டத்தில் திறமை அடிப்படையில் 5 பதக்கங்களும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கல்வியாண்டு மாணவர்களுக்கும் வழங்கப்படும்.

**முடிவுத் திகதி: 12.03.2010**

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
2010.02.24

(அ-4521)


**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com

**Learn French the French Way French Classes**

சர்வதேச மொழியான French மொழி யாழ்ப்பாணத்தில் French Embassy இன் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.

எங்களுடைய நூலகத்தை மாணவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

விரிவுரையாளர்கள்: பிரான்ஸியரும், பிரெஞ்சில் தகைமை பெற்றோர்களும்.

*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.*

அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாகப் பெறலாம். (486)

# பாராளுமன்றத் தேர்தல் -2010

# யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும்

### தமிழரசுக் கட்சி

(சின்னம் – வீடு)

மாவை சேனாதிராசா(முதன்மை வேட்பாளர்), கந்தையா சுரேஸ்பிரேமச்சந்திரன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சி. வீ. கே.சிவஞானம், சூசைப்பிள்ளை சேவியர் குலநாயகம், ஆறு முகம்நடேசு இராசேந்திரன், கந்தையா அருந்தவபாலன், சிவஞானம் சிறிதரன், ஈஸ்வரபாதம் சரவணபவன், இராசரத்தினம் சிவச்சந்திரன், ஜங்கர நேசன்பொன்னுத்துரை, முடியப்பு றெமிடியஸ்.

### அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்

(சின்னம் –துவிச்சக்கரவண்டி)

சின்னத்துரை வரதராஜன்(முதன்மை வேட்பாளர்), விஜயரட்ணம் ஜோன்மனோகரன் கெனடி, கந்தசாமி திரிலோகமூர்த்தி, சந்தனம் ஸ்ரீபன்,நடேசு துரைராசா, நாகலிங்கம் குழந்தைவேலு, விஸ்வலிங்கம் மணிவண்ணன், பிரான்சிஸ் வின்சென்டிபோல், செல்லத்துரை சுப்பிரமணியம், பத்மினி சிதம்பரநாதன்,செல்வராசா கஜேந்திரன்,கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

### இடதுசாரி விடுதலை முன்னணி

(சின்னம் –குடை)

நல்லதம்பி ஸ்ரீகாந்தா(முதன்மை வேட்பாளர்), கனகலிங்கம் சிவாஜிலிங்கம், இரத்தினம் ஜெகராசா, தமியான் யூலியான்,அருமைநாதன் தவநாதன்,சுப்பிரமணியம் செல்வநேசன், பொன்னராசா பூலோகசிங்கம், கனகசபாபதி நமநாதன்,மொஹமது இஸ்மாயில் உம்மசசீசீலா,விஜயதர்மா கேதீஸ்வரதாசன், சண்முகலிங்கம் சஜீவன், தியாகராசா இராசரத்தினம்.

### சோசலிச சமத்துவக் கட்சி

(சின்னம் –கத்தரிக்கோல்)

திருஞ்செல்வம் சுப்பிரமணியம் (முதன்மை வேட்பாளர்), கிருஸ்ணன் சித்திரகுமார், முத்துலிங்கம் முருகானந்தன், சிவலிங்கம் சிவசீலன், இராசேந்திரம் சுதர்சன், இராசரத்தினம் ராஜவேல், ஐயம்பிள்ளை லக்ஷமன், நாகராஜ் கோடீஸ்வரன், இராசரட்ணம் பாலகௌரி, மகாலிங்கம் திருமாறன், நந்தா விக்கிரமசிங்கி , பிரியதர்ச மதியவதா.

### சுயேட்சை குழு – 2

(சின்னம் – மூக்குக் கண்ணாடி)

சண்முகநாதன் மனோகரன்(முதன்மை வேட்பாளர்), வைத்திலிங்கம் இராமச்சந்திரன் ,செல்லப்பா இரவீந்திரன்,தாமோதரம்பிள்ளை அருளானந்தம், சிவசுப்பிரமணியம் ஜெயமனோகரன்,அன்ரன் அருட்குமார் கிருஷ்ணபக வதி,பெரியண்ணன் குனேஸ்வரா,தர்மராசா நிரோஷன், பொன்னம்பலம் யோகேஸ்வரன், கார்த்திகேசு டனிஸ்குமார், தம்பாப்பிள்ளை செல்லத்துரை, நவரட்ணம் ஜெயராசன்.

### சுயேட்சை குழு – 6

(சின்னம் – கேத்றில்)

காசிப்பிள்ளை செந்தில்வேல் (முதன்மை வேட்பாளர்), கார்த்திகேசு கதிர்காமநாதன், தம்பர் வடிவேலு கிருஷ்ணசாமி, கந்தப்பு ஆனந்த குமாரசாமி, கார்த்திகேசு பஞ்சரத்னம், குமாரசுவாமி சோதிலிங்கம், ஆழ்வான் தங்கராசா, கார்த்திகேசு மகாதேவன், சபாபதி தவராசா, துரைசிங்கம் சுரேஸ்குமார், சிவலை அன்புக்கரசு , திரவியம் ராம்குமார்.

### ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

(சின்னம் –வெற்றிலை)

டக்ளஸ்தேவானந்தா(முதன்மை வேட்பாளர்),சந்திரகுமார் முருகேசு,சில்வஸ்திரி அலன்ரின், பசுபதி சீவரட்ணம்,அலெக்சாண்டர் சூசைமுத்து, கந்தசாமி கமலேந்திரன், ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், முருகுப்பிள்ளை ஸ்ரீபதி, அங்கசன் இராமநாதன், கிருஸ்ண பிள்ளை சிறிசரவணபவன், நவரட்ணம் யோகராசா, அப்துல் ஹாகீம் மொஹமட் அமீன்.

### ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா)

(சின்னம் –மெழுகுதிரி)

திருநாவுக்கரசு ஸ்ரீதரன் (முதன்மை வேட்பாளர்),கந்தையா சிவராசா, நாகமணி நீக்கிலஸ் அரியரட் ணம்,காளிகுட்டி ஜெயகுமாரன் ,வசந்த நாதன் சிவநாதன்,இராஜேந்திரம் செல் வராசா, கைலாயபதி பகீரதன், துரைஜயா மகாலிங்கம், இராஜரட்ணம் கோணேஸ் வரன், தில்லைநாதன் தங்கவேலு, அரியகுட்டி ஜோன்,சின்னத்தம்பி தங்கராசா.

### ஈழவர் ஜனநாயக முன்னணி

(சின்னம் –கலப்பை)

அருளப்புறிச்சட் அருள்பிரகாசம் (முதன்மை வேட்பாளர்), தெய்வேந்திரம் சிறிதரநாதன், இம்மானுவேல்கைமர், முத்துக்குமாரு சிவநாதன், கார்த்திகேசு யோகரட்ணம்,மார்க்கண்டு துரைராஜா, சண்முகம் இராஜலிங்கம், சின்னையா செல்வநாயகம்,பரம்ஜோதி விநோத்குமார், எம். ஜெஸ்மின்,சிங்கராஜா ஞானேஸ்வரி, நாகலிங்கம் திருநாவுக்கரசு.

### ஜனசத் பெரமுன

(சின்னம் –உழவு இயந்திரம்)

டி.கே. சாகர திசநாயக்க(முதன்மை வேட்பாளர்), ராஜலிங்கம் விக்னேஸ் வரலிங்கம், பண்டுக வீரசேகர,ஹெட்டி கொட, அருள் அமுதன்,சித்தக்க சாவந்து, யூட் சண்முகன்,எம்.எம். அன்சார்,ஆசான்ஆனந்தம், சமிந்த ரணசிங்க,மஞ்சுளா சொக்கலிங்கம், திகான் ஸ்ரீமால் பிரசன்ன.

### சுயேட்சை குழு – 3

(சின்னம் – ஹெலிகொப்டர்)

பறனாந்து ஜோசப் அன்ரனி(முதன்மை வேட்பாளர்), செல்லப்பா சதானந்தன், நடராசா தமிழழகன், உருத்திராதேவி சண்முகநாதன், கந்தன் இராசரத்தினம், காந்தி அதிகாரம், மாணிக்கம் பொன்னுத்துரை, தம்பியான் கந்தையா, வைரவன் யோகநாதன், பிலிப் ஜோன் கபாஸ், குணசிங்கம் கோபிநாத், சுப்பிரமணியம் மகேந்திரராஜா.

### சுயேட்சை குழு–7

(சின்னம் – கணனி)

பொன்னுத்துரை சிவபாலன்(முதன்மை வேட்பாளர்),நாகேந்திரம் புஸ்பவசந்தன், ஆனந்தராசா அன்புஜன், ஏகாம்பரம் ஸ்ரீதரன், இரத்தினம் ஜெகானந்தன், முருகன் நடேசன், இராசாவேதீஸ்வரன், சிவசுப்பிரமணியம் ஜெயச்சந்திரன், பொன்னுத்துரை சிவானந்தன், சிவானந்தன் விக்னேஸ்வரி, அப்புத்துரை சற்குணராசா, சிறிதரன் லக்ஸ்மன்.

### சுயேட்சை குழு –10

(சின்னம் – பட்டம்)

நாகமுத்து தணிகாசலம்பிள்ளை (முதன்மை வேட்பாளர்), சோமசுந்தரம் பிள்ளை பத்மநாதன், வைத்திலிங்கம் செகராஜசிங்கம்,கந்தையா ஈஸ்வரி, கனகபிள் ளை ஜெகசோதி, பொன்னம்ப லநாதன் நதீஸ்குமார், கயிலாயநாதன் துஸ்யந்தன், பரமநாதன் கமலதாசன், சுவாமிப் பிள்ளை மதிசலீன், அருள்ரா ஜன் கனித்திரா, வல்லிபுரம் யோகானந்த சிவம், சின்னத்தம்பி கனகராசா.

### ஐக்கிய தேசியக் கட்சி

(சின்னம் – யானை)

திருமதி விஜயகலா மகேஸ்வரன் (முதன்மை வேட்பாளர்), தியாகராஜா துவாரகேஸ்வரன், நடராஜா சண்முகவேல், சாம்பசிவம் சத்தியேந்திரா, ராஜரத்தினம் ஸ்ரீதாமோதரராஜா, சண்முகசுந்தரம் லவகுமார், சின்னத்துரை குலேந்திராஜா, அந்தோனியூட் ராஜசிங் கம், வல்லி மகேந்திரன், சுந்தரலிங்கம் ஸ்ரீகஜன், மொஹமட் அப்துல்காதர் மொஹமட் மூபின், மமுனா லீபாய் செயிட் அமீர்.

### ஜனநாயக தேசிய கூட்டணி

(சின்னம் –வெற்றிக்கிண்ணம்)

வீராயு லலித்குமார்(முதன்மை வேட்பாளர்),டிசிமுத்து நடராசா, பாலசிங்கம் கமலகுமார், சிவகுருநாதன் மேனன், பத்மநாதன் கருணாவதி, தங்கரட்ணம் சசிகலா,அம்பிகைகுமார் லலிதா,சக்திவேலு தங்கேஸ்வரன், முத்துத்தம்பி பாலசுந்தரம்,நாகரட்ணம் நளாயினி, முது மொஹமட் நிவாஸ், கோப லன் அருளப்பன்.

### ஐக்கிய சோசலிச கட்சி

(சின்னம் –முச்சக்கரவண்டி)

சுப்பிரமணியம் நகுல்ராசா(முதன்மை வேட்பாளர்), ஜீ.சிவரஞ்சன், எம். மொஹய்ர், ரி. சுரேந்திரகுமார்,பி. இராக்குமார்,கே. சிவராசா, எம்.ஏ. பாலிதகீர்த்தி சிறி,ஏ.யோகநாதன்,கே. ஜெயன்சி, ஏ.பசித் ,வீ.சின்னையா,எஸ். சசிகுமார்,

### ஜனநாயக ஐக்கிய முன்னணி

(சின்னம் –இரட்டை இலைகள்)

செல்வரத்தினம் சாந்தகுமார் (முதன்மை வேட்பாளர்), பாலசிங்கம் அனிசன், சிஹாப்தீன் கிர்ஷாத், சண்முகநாதன் ஜெகன், சீவரத்தினம் மாணன் விக்டர் லோகநாதன், சிதம்பரப்பிள்ளை இராசேந்திரம், புஸ்பராசா புவிலன், மாயழகர் உதயகுமார், யோகராசா முகுந்தன், விஜயரத் தினம் பிரதீப், சண்முகலிங்கக்குருக்கள் ராஜீவ்பாபு, சின்னத்துரை அகிலேஸ்வரன்.

### சுயேட்சை குழு–4

(சின்னம் – ஆமைப்பூட்டு)

கதிரவேல் செவ்வேல் (முதன்மை வேட்பாளர்),வேலுப்பிள்ளை இராசரத்தினம், கந்தையா யோகநாதன்,சின்னக்குட்டி மகேஸ்வரன்,மீராலெப்பை லாபீர், இராசரத்தினம் கங்கைமைந்தன், விசயராசா விஜயரூபன், நாகரத்தினம் சிவகரன், கந்தையா ஜெசிதரன், முருகேசு அற்புதராசா, சீனிப்பிள்ளை செபரத்தினம், சோமசூரியசிங்கம் செந்தூரன்.

### சுயேட்சை குழு– 8

(சின்னம் – அணில்)

அருணாசலம் சொக்கநாதன் சந்திரன் (முதன்மை வேட்பாளர்), செல்வராசா இரமணன், கருணதாஸ் மிரோஜன், சத்தியலிங்கம் தயாளன்,கந்தசாமி வர்ணன், மாரிமுத்து பரமேஸ்வரன், நீக்கிலாம்பிள்ளை ஜெபநெசன், குமாரசிங்கம் கேசவன், நாகையா சிவசிதம்பரலிங்கம், சபாரத்தினம் கணநாதன், தம்பிராசா மணிதரன், பாஸ்கரன் கேசவன்.

### சுயேட்சை குழு–11

(சின்னம் – மாம்பழம்)

ஆர்.எம்.மகிந்த திலக் உடுகம(முதன்மை வேட்பாளர்),கந்தையா குணராசா , அருள் பிரகாஸ், பொன்னுத்துரை வேலாயுதபிள்ளை,ஆறுமுகம் நடராசா , முருகேசு அருமைநாயகம், கிருஷ்ண பிள்ளை பத்மநாதன்,நல்லைநாதன் முருகானந்தம், மதனசேகர் கெளரி , சண்முகராசா, செல்வராசா ஸ்ரீநாகநாதன் , ஒலின் அனிதா.

### தமிழர் விடுதலைக்கூட்டணி

(சின்னம் – சூரியன்)

வீரசிங்கம் ஆனந்தசங்கரி (முதன்மை வேட்பாளர்), சதாசிவமூர்த்தி குமாரசாமி, மகாலிங்கம் செல்லப்பா,கோபிதாஸன் சிவரத்தினம், திருஞானம்பந்தர் தம்பையா, முருகேசு அரியகுட்டி,முத்துலிங்கம் செல்லப்பா, பத்மநாதன் சுப்பையா, இராஜராஜேஸ்வரி சுப்பையாப்பிள்ளை, சாந்தசொரூபன் இளையதம்பி, இரத்தினமணி இராசையா, சண்முகராசா வல்லிபுரம்.

### தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள்

(சின்னம் –வள்ளம்)

கந்தையா அருமைலிங்கம் (முதன்மை வேட்பாளர்),ரமணி தங்கராசா,முத்துகோணலிங்கம், சுப்பிரமணியம் பவானி, மனோகரன் ஹீகரன், சித்ரவேல் சிவானந்தி, நல்லசேகரம் சிவஜோதி,திகரன் பிள்ளை பிரஜித், பூபாலப்பிள்ளை ஹரிதாஸ், சுப்பிரமணியம் யோகநாதன், வடிவேல் றமேஸ்கு மார், சுந்தராஜா சௌந்தரராஜா.

### எல்லோரும்மக்கள்எல்லோரும்மன்னர்கள்.

(சின்னம் –உண்டியல்)

விகவானந்தன் சந்திரலிங்கம் (முதன்மை வேட்பாளர்), தம்பிராசா நவஜிதராசா, மயில்வாகனம் ஜெயானந்தன், பிரான்சிஸ் றொபின்சன், தங்கராஜா தர்மசீலன், சந்தானம் விஸ்வநாதன், சிதம்பரப்பிள்ளை டிலக்சன், சிவகுமாரன் அஜன், சிவானந்தன் சிவரூபன்,முருகேசு நவரட்ணராஜா, மோகன்ராஜ் சுநேந்தன், பரசுராமன் புஸ்பராசா.

### சுயேட்சை குழு –1

(சின்னம் –இரட்டைக்கொடி)

பொன்னுத்துரை செந்தில்நாதன் (முதன்மைவேட்பாளர்),தேவதாசன்யூட்ஜேந்திரா, சிவச்சந்திரன் சிலேந்தினி, யோக நாதன் பிரசன்னா, ஞானப்பிரகாசம் தேவதாசன், சபாபதிப்பிள்ளை ஜெயச் சந்திரன், திருச்செல்வம் ரமேஸ்,நடராசா பிரேம்நாத், மனாசைடேவிட் தம்பிராசா, மாரிமுத்து நாகேந்திரன்,லோகநாதன் கஜேந்திரா.

### சுயேட்சை குழு– 5

(சின்னம் – வானொலிப்பெட்டி)

அன்ரனி ரங்காதுசாரா(முதன்மை வேட்பாளர்), குணசேகரம் காந்தரூபன், கந்தாதே நவிசரகே ராஜரத்தினம், செல்வராசா ரஜீபன், முத்துக்குமாரு உதயசிறி, இளையதம்பி சற்குருநாதன், சபாபதிப்பிள்ளை மகேந்திரராஜா, தம்பையா செல்வரட்ணம், கதிர்காமநாதன் அகிலேசன், வைத்திலிங்கம் உதயராசா, சின்னத்துரை அபிமன்யன, ஜெயசோதி ஜெயலன் .

### சுயேட்சை குழு – 9

(சின்னம் – பந்து)

வல்லி நடராசா (முதன்மை வேட்பாளர்), கனகசபை நட்ராசா கல்யாணசுந்தரம், சதாசிவம் வேலாயுதம், சந்தனம் கனகரத்தினம், துரைராஜ் கிருஷ்ணசிங்கம், வல்லிபேரம்பலம், நவரத்தினம் குணமணி, தங்கராஜா தர்ஜா, இக்னேசியஸ் ஜெனிபர் ஜெய மனோகரன், சிவசுப்பிரமணியம் நாகம்மா, அப்புத்துரை தர்மலிங்கம், முத்தர் பரமலிங்கம் .

### சுயேட்சை குழு–12

(சின்னம் – அன்னாசி)

மொஹமர் ஆபூத்ஹிர் மஹீர் (முதன்மை வேட்பாளர்),மொஹமட் இஸ்மாயில் மொஹமட் சாஹீர், மொஹமட் மீராசாரிபு மொஹமட் ஜோப்பீர், ஹசான் குதூஸ் பாஸ் நசூர்தீன், அப்துல் காதீர் அமீஸ், மொஹமட் அமீர் மொஹமட்கரோஸ், சலாருதீன்மொஹ மட்ரவ்ஷான், பாலசிங் கம் லோகேஸ்வரன், மலோசியஸ் அருள் ராஜன், செல்லத்துரை கிரிகரன், பஞ்சரட்ணம் கவிரசன், பாஸ்கரமூர்த்தி பிரசாத்.

# வடக்கின் பெரும் கிரிக்கெட் போரில் தொடர்ந்து நான்காவது முறை யாழ். மத்திய கல்லூரி வெற்றி



(யாழ்ப்பாணம்)

முன்னணி வீரர்களின் அசத் தலான துடுப்பாட்டத்தின் மூலம் "வடக்கின் பெரும் போரில்" யாழ். மத்திய கல்லூரி அணி தொடர்ச்சி யாக நான்காவது வருட வெற்றி யைப் பெற்று வரலாறு படைத்தது.

"வடக்கின் பெரும்போர்" என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடை யிலான 104 ஆவது வருட கிரிக்கெட் போட்டி கடந்த 25 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

மூன்றுநாள் இன்னிங்ஸ் ஆட்டமான இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணித்தலைவர் ஜேம்ஸ் ஜான்சன் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப் பெடுத்தாடிய யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 165 ஒட்டங்களை எடுத்தது.

இதில் வி.ஹரிவதனன் 85 ஒட்டங்களையும், வி.பிரணவன் 29 ஒட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பாக ஜி.ஜெரிக் துஷன்,ரி.தர்ஷன் ஆகியோர் தலா 3விக்கெட்டுக்களையும், ஆர்.வதுசனன் 2 விக்கெட்டையும் என்.ஜெனோசன் ஒருவிக்கெற்றையும் சாய்த்தனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையுமிழந்து 159 ஒட்டங்களை எடுத்தது.இதில் அணித்தலைவர் எஸ்.ஜேம்ஸ் ஜான்சன் 50 ஒட்டங்களையும், ஜி.ஜெரிக்துஷன் 46 ஒட்டங்களையும்,திவாகர் 26 ஒட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக வி.ஹரிவதனன் 7 விக்கெட்டுக்களையும், எஸ்.டக்சன் 2 விக்கெட்டுக்களையும், விதுசன் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர். இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 6 ஒட்டங்கள் வித்தியாசத்தில் முன்னி லையிலிருந்த யாழ். சென் . ஜோன்ஸ் கல்லூரி அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 124 ஒட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் எஸ். பிரியதர்ஷன் 33 ஒட்டங்களையும் ஏ.விதுஷன் 20 ஒட்டங்களையும் எஸ். டக்ஸன் 13 ஒட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பாக ஆர். வதுஷனன், ரி.தர்ஷன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும் என். திவகர், ஜே.ரதீஸன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இந்த நிலையில் 131 ஒட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப் பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி நேற்று முன்தினம் இரண்டாவது நாள் ஆட்டநேர முடிபில் 2 விக் கெட்டுக்களையிழந்தது 32 ஒட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் மூன்றாவதும் இறுதி நாளான நேற்று தொடர்ந்து துடுப் பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 47 ஒட்டங்களை எடுத்த நிலையில் அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுக்கையிழந்தது.

இதில் என்.திவாகர் 16 ஒட்டங்களுடனும் எஸ்.தனுசன் 17 ஒட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து 5 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஜெரிக்துஷன்-ஜேம்ஸ் ஜான்ஸன் ஜோடி பொறுப்பான இணைப் பாட்டத்தை வழங்கியது.

இந்த ஜோடி 5ஆவது விக்கெட்டுக்காக 41 ஒட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது அணித்தலைவர் எஸ். ஜேம்ஸ் ஜான்ஸன் 23 பந்துகளில் (3பவுண்டரிகள் உட்பட) 25 ஒட்டங்களுடனும் ஜி.ஜெரிக் துஷன் 18 ஒட்டங்களுடனும் ஆட்டமிழக்க யாழ். மத்திய கல்லூரி அணி 31.5 ஓவர்களில் 90 ஒட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக் களையிழந்தது.

இந்நிலையில் 7ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஜெனோசன், ரதீஷன் ஜோடி பிரிக்க முடியாத இணைப் பாட்டத்தை வழங்க யாழ். மத்திய கல்லூரி அணி இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 137 ஒட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற் பெற்றது.

இதில் உப அணித்தலைவர் என். ஜெனோசன் 37பந்துகளில் (4பவுண்டரிகள் உட்பட) 25 ஒட்டங்களையும் ஜே.ரதீஸன் 25 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 14 ஒட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக வி.ஹரிவதனன், ஏ.விதுஷன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் எஸ். டக்சன், கோ.யோகேஸ்வரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டி மூன்றாம் நாள் மதிய போசன இடை வேளைக்கு முன் நிறைவடைந்தது.

இவ்வெற்றியின் மூலம் யாழ். மத் திய கல்லூரி அணி வடக்கின் பெரும் பேரில் தொடர்ச்சியாக நான் வருடமாக வெற்றிபெற்றுள்ளது. அத்துடன் இதுவரை நடந்த 104 வருடவடக்கின் பெரும் போரில் 26 ஆவது வெற்றி இதுவாகும். வடக்கின் பெரும்போரில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 33 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியின் வெற்றிக்கு வழியமைத்த அணித்தலைவர் எஸ். ஜேம்ஸ் ஜான்ஸன் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

அத்துடன் போட்டியின் சிறந்த சகலதுறை வீரராகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் வி.ஹரிவதனன் தெரிவானார்.

இப் போட்டியில் சிறந்த பந்து வீச்சாளர் விருது யாழ். மத்திய கல்லூரி வீரர் ரி.தர்ஷனுக்கும் சிறந்த களத் தடுப்பாளர் விருது சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர் வி.பிரணவனுக்கும் வழங்கப்பட்டது.

இதேவேளை இப்போட்டிக்கு பூரண அனுசரணையை டயலொக் நிறுவனம் வழங்கியிருந்தமை குறிப்பிடத் தக்கது.










# ஈழத்து இலக்கியமும் வரலாறும் 20

## யாழ்ப்பாண வைபவமாலை

பேராசிரியர்
சி.பத்மநாதன்

ஈழவள நாட்டிலே; அதன் வடகிழக்குப் பகுதிகளிலே 13ஆம் நூற்றாண்டிலே ஒரு தமிழ் இராச்சியம் வன்னிகள் என்ற பல குறுநில அரசுகளும் எழுச்சி பெற்றதன் விளைவாக அவற்றின் தோற்றம், வளர்ச்சி ஆகியன பற்றிய வரலாற்று மரபுகள் எழுந்தன.

அத்தகைய மரபுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நூல்களிலே ***யாழ்ப்பாண வைபவமாலை*** என்பதே பிரதானமானது. இது இப்பொழுது கிடைக்கின்ற உரைநடையில் உள்ள ஈழத்து தமிழ் நூல்களிலே ***யாழ்ப்பாண வைபவமாலை***, ***தேச வழமை*** ஆகிய இரண்டுமே மிகப் பழையவை. எனவே ஈழநாட்டு தமிழ் மொழி வளர்ச்சியை பொறுத்தவரையில் ***யாழ்ப்பாண வைபவமாலை*** பற்றிய அறிவு அவசியமானது. அந்நூலில் மொழி நடை செந்தமிழ் வழக்காகும். அதுவும் ஈழத்தமிழர்களுக்கு சிறப்பாகவுள்ள




நடையாகும். அது எல்லோரும் எளிதிலே புரிந்துகொள்ளக்கூடிய வகையிலே இலகுவான நடையிலே எழுதப்பட்டுள்ளது. சமகால தென்னிந்திய தமிழ்நூல்களிற் போலல்லாது அதில் வடமொழிச் சொற்கள் மிக அரிதாகவே வருகின்றன. வசனங்களுஞ் சிறியனவாகவே அமைக்கப்பட்டுள்ளன. தென்னிந்திய தமிழகத்திலே உரைநடையிலே செந்தமிழ் வழக்கு மருவி மணிப்பிரவாளம் வழமையாகிய போதும் ஈழநாட்டு தமிழர்கள் செந்தமிழ் வழக்கினைத் தொடர்ச்சியாகப் பேணி வளர்த்து வந்துள்ளமைக்கு யாழ்ப்பாண வைபமாலை போன்ற நூல்கள் சிறந்த எடுத்துக்காட்டுக்களாயுள்ளன.

### மயில்வாகனப் புலவர்

மயில்வாகனப் புலவர் யாழ்ப்பாண வைபவமாலையை எழுதினார் என்பதை அந்நூலின் பாயிரச் செய்யுள் மூலமாக அறியமுடிகின்றது. அவர் வையாபுரி ஐயரின் மரபில் வந்தவர் என்பது ஓர் ஐதீகம். யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்த ஒல்லாந்த அதிகாரிகளின் வேண்டுதலுக்கிணங்கியே யாழ்ப்பாண வைபவமலை எழுதப் பெற்றது. மேக்கரூன் என்ற ஒல்லாந்த அதிபரின் வேண்டுகோளின் விளைவாகவே தாம் நூலை எழுதியதாகவும் மயில்வாகனப் புலவர் கூறியுள்ளார். கி.பி. 1736 ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணத்திலே கொம்மாந்தராக (Commandeur) விருந்த இயன்மக்கராவையே மயில்வாகனப் புலவர் மேக்கரூன் எனக் குறிப்பிட்டுள்ளார் என சிலர் கருதுகின்றனர். மேலும் இக் கருத்தின் அடிப்படையில் யாழ்ப்பாண வைபவமாலை 18ஆம் நூற்றாண்டில் முதல் பகுதியிலே எழுதப்பட்டதென்று கொள்ளப்படுகிறது. யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிவதில் மரபுவழியான திருவாசக முறையினை ஒல்லாந்த அதிகாரிகள் பின்பற்றியதனால் யாழ்ப்பாணத்தமிழரின் வரலாறு, சமுதாய வழமைகள் ஆகியவற்றைப் பற்றி அவர்கள் அறிந்துகொள்ள வேண்டியிருந்தது. அத் தேவையின் காரணமாகவே யாழ்ப்பாண வைபவமாலை எழுதப் பட்டிருத்தல் வேண்டும்.



மயில்வாகனப் புலவர் மரபு வழியான தமிழ்க் கல்வியைக் கற்றுப் பாண்டியம் பெற்றிருந்தார். புராண இதிகாசங்களிலும் பிற இலக்கியங்களிலும் புலமை பெற்றிருந்தார். ஆனால் ஐரோப்பியரின் கல்வி முறைமையினையும், இலக்கிய பாரம்பரியத்தையும் அவர் அறிந்திருக்கவில்லை. எனவே, ஐரோப்பிய வரலாற்று நூல்களை அறிந்துகொள்ளும் வாய்ப்புகளை அவர் பெற்றிருக்கவில்லை. தமிழிலும் வடமொழியிலும் தரமான வரலாற்று நூல்கள் இருக்கவில்லை. தமிழிலுள்ள அரச வம்சங்கள் பற்றிய வரலாற்று நூல்கள் நாயக்கர் காலத்தில் மட்டுமே, பிறநாட்டுச் செல்வாக்கின் பயனாக எழுதப்பெற்றன. உலகிலே தேசிய உணர்ச்சியினைக் குறிப்பிடத்தக்களவிலே ஆதிகாலத்திலிருந்து பெற்றிருந்த கிரேக்கர், சீனர் போன்ற சமுதாயங்களே வரலாற்றுணர்வினைப் பெற்றிருந்தன. இந்துக்களின் பாரம்பரியத்திலே தேசிய உணர்வு ஊன்றியிருக்கவில்லை.

வைதீக நூல்கள் வற்புறுத்தி வந்த வர்ணாச்சிரமமானது தேசம் என்பதற்கு எதிரிடையான போக்கினையே வளர்த்து வந்தது.

எனவே வைதீகத்தின் செல்வாக்கினாற் கவரப்பட்டிருந்த தமிழ்ப் புலவர்களும் வரலாற்றுணர்வினைப் பெறக்கூடிய சூழ்நிலையில் வாழ்ந்திருக்கவில்லை. தமிழக வரலாற்றிலே சோழப் பெருமன்னனாகிய முதலாம் இராசராசன் (985–1016) ஒருவன் மட்டுமே வரலாற்றுணர்வுடையவனாயிருந்தான். அவனுடைய ஆட்சியாவணங்களின் முன்னுரைகளாக அமைந்த மெய்க்கீர்த்திகள் வரலாற்று நிகழ்ச்சிகளின் கோவைகளாயிருந்தன. இராசராசன் ஏற்படுத்திய புதுமையினைத் தமழகச் சான்றோரினால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மயில்வாகனப்புலவர் அதிக பாண்டித்தியம் பெற்றிருந்தும் ஒரு தரமான வரலாற்று நூலை எழுதக்கூடிய தகைமையினைப் பெற்றிருக்கவில்லை. தமிழிலக்கியங்களிலும், பொதுவாக இந்திய இலக்கியங்களிலும் வரலாற்றுக்கும் புராண இதிகாசங்களுக்கும் இடையிலான வேறுபாடு அவதானிக்கப்படவில்லை. வரலாற்றுக்கு அடிப்படையான கால வரையறையினையும் இந்தியப் புலவர்கள், குறிப்பாக இந்துக்கள் தெளிவான முறையிலே அறிந்திருக்கவில்லை. எனவே, ஒரு தரமான வரலாற்றிலக்கியத்திற்குத் தேவையான அம்சங்களை யாழ்ப்பாண வைபவமாலையிலே எதிர்பார்க்க முடியாது.

### நூலின் மூலாதாரங்கள்

வையாபாடல், கைலாயமாலை, இராச முறை, பரராசசேகரன் உலா என்ற நான்கு நூல்களையும் ஆதாரங்களாகக் கொண்டே தாம் யாழ்ப்பாண வைபவமாலையை எழுதியதாக மயில்வாகனப் புலவர் நூலின் பாயிரத்திலே குறிப்பிட்டுள்ளார். இந் நான்கு நூல்களுள் கைலாய மாலை, வையாபாடல் ஆகிய இரண்டுமே இப்போது கிடைக்கின்றன. ஏனைய இரு நூல்களின் ஏட்டுப்பிரதிகள் மயில்வாகனப்புலவருக்கு பிற்பட்ட காலத்திலே அழிந்தொழிந்து விட்டன. (தொடரும்)

# தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களுக்கும் உரிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை

## பொலிஸ் தலைமையகம்

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் அனைத்தும் நேற்றுமுன் தினம் நண்பகலுடன் தாக்கல் செய்யப்பட்டு முடிந்துள்ள நிலையில், தேர்தலில் போட்டியிடுகின்ற சகல வேட்பாளர்களுக்கும் உரிய பாதுகாப்பினை வழங்குவதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை உறுதிப்படுத்துவதற்காகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தலைமையகம் கூறியுள்ளது.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் ஆரம்பித்துள்ள நிலையில், ஆங்காங்கே சிற்சில வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்ட கட்சிகள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்கள் சிலரும், அவர்களது ஆதரவாளர்களும் பயணித்துக்கொண்டிருந்த வாகனங்கள் மீது களுத்துறை - பயனாகலைப் பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

இதேவேளை, இதேபோன்றதொரு தேர்தல் வன்முறைச் சம்பவம் பேலியகொடையிலும் இடம்பெற்றுள்ளதாக பேலியகொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேலியகொடை நகரசபையின் உப தலைவர் உபாலி நாணயக்காரவின் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியிருப்பதாகவும் இது தொடர்பில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையிலேயே, தேர்தல் நடவடிக்கைகள் மற்றும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற வேட்பாளர்களின் பாதுகாப்பு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸ் திணைக்களம் தீர்மானித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அந்தந்த மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ் உயரிதிகாரிகளுக்கும் இது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# அமைதியான முறையில் தேர்தலை நடத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

## ஐ.தே.க.கோரிக்கை

(கொழும்பு)

அமைதியான முறையில் பொதுத் தேர்தலை நடத்த அனைத்து கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமென ஐக்கியதேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை சுமுகமான முறையில் நடாத்த அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரவு வழங்க வேண்டுமென கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலின் போது மோதல்களற்ற வகையில் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவே ஐக்கிய தேசியக் கட்சி கூடுதல் முனைப்புக் காட்டும் என அவர்குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹா மாவட்டத்திற்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலை நடத்த வேண்டுமாயின் தேர்தல் சட்டங்கள் பின்பற்றப்படவேண்டியது இன்றியமையாததெனவும் அச்சமின்றி மக்கள் தங்களது வாக்குகளை அளிக்கக் கூடிய ஓர் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டியது அவசியமானதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஒழுக்கமான இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு அனைத்து முற்போக்கு சக்திகளும் ஒன்றிணைய வேண்டுமென ஜனநாயக தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் விஜிதஹேரத் தெரிவித்துள்ளார். (6)

# வன்னித் தேர்தல் தொகுதியில் 252 வேட்பாளர்கள் களத்தில்

வன்னி தேர்தல் தொகுதிக்கு ஆறு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக பதினாறு அரசியல் கட்சிகளும், பன்னிரண்டு சுயேட்சைக் குழுக்களும் களத்தில் இறங்கியுள்ளன.

பத்தொன்பது கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தன. இவற்றில் மூன்று கட்சிகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

பதினைந்து சுயேட்சைக் குழுக்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்தன. இவற்றின் மூன்று குழுக்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. ஆறுபேரைத் தெரிவு செய்வதற்காக 252 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். (6)






மன்ரா குளோபல் எக்ஸ்கியூரிவ் சேர்ச் பிறைவேற் லிமிட்டெட் மற்றும் மன்ரா எடியூகேசன் பிறைவேற் லிமிட்டெட் ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடத்திய சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கான கருத்தரங்கு நிகழ்வு அண்மையில் யாழ்.தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, நிசேன் அபேசிங்க ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும், விற்பனை முகாமையாளர் விரிவுரை நிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

## இலங்கை மக்கள் தொகையில்
## 15.02 வீதமானோர் மிகவும் வறிய நிலையில்
### புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மக்கள் தொகையில் 15.02 வீதமான மக்கள் மிகவும் வறிய நிலையில் இருப்பதாக புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நபர் ஒருவர் மாதாந்தம் உணவை பெற்றுக்கொள்வதற்கான செலவு கடந்த ஜனவரி மாதத்தில் 3ஆயிரத்து 79 ரூபாவாக காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகையானது கொழும்பு மாவட்டத்தில் 3ஆயிரத்து 430 ரூபாவாகவும், கம்பஹா மாவட்டத்தில் 3 ஆயிரத்து 262 ரூபாவாகவும் கண்டி மாவட்டத்தில் 3ஆயிரத்து 155 ரூபாவாகவும் காலி மாவட்டத்தில் 3 ஆயிரத்து 166 ரூபாவாகவும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 2ஆயிரத்து 968 ரூபாவாகவும் காணப்பட்டதாக புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (6)

## தேர்தல் வன்முறைகளைத் தடுக்கும் வகையில்
## அடிப்படை மனித உரிமைமீறல் மனுத் தாக்கல் செய்யப்படும்
### மாற்றுக்கொள்கைளுக்கான மத்திய நிலையம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுவதனைத் தடுக்கும் நோக்கில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்ய உத்தேசித்துள்ளதாக மாற்றுக்கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் அறிவித்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இடம்பெற்ற வன்முறைகள் மீண்டும் இடம்பெறாத வகையில் தடுக்கும் நோக்கில் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை நடாத்த தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவு பிறப்புக்குமாறு கோரி உச்சநீதிமன் றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்படவுள்ளதாக மத்திய நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கிய சோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

இடம்பெயர் மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்துமாறு கோரி ஏற்கனவே அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பான விசாரணைகள் அடுத்தமாதம் 11 ஆம் திகதி நடைபெறும் எனவும் அவர்குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஆணையாளர் மற்றும் ஏனைய தேர்தல் அதிகாரிகள் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இடம்பெயர் மக்கள் சுதந்திரமான முறையில் வாக்களிப்பதற்கு தேவையான போக்குவரத்து உள்ளிட்ட சகல வசதிகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும் நியாயமான தேர்தலுக்கான உத்தரவாதத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் தமது அமைப்பு இன்னும் சில அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்ய உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேர்தல் வன்முறைகள், அர சு சொத்து துஷ்பிரயோகம், ஊடகங்களில் சட்டத்திற்கு முரணான பக்கச்சார்பான தேர்தல் பிரச்சாரங்களை தடை செய்தல் போன்றவை தொடர்பில்கவனம்செலுத்தப்படவேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (6)


## கண்ணீர் அஞ்சலி



பேராசிரியர் கைலாசநாதக்குருக்களின் அன்புக்குரிய மாணவனாக விளங்கி குருத்துவப் பணியில் சிறப்புப் பெற்று, உலகின் பல பாகங்களிலும் ஆன்மீக ஒளிபரப்பிய அன்புக்குரிய சகோதரன்

**பிரம்மஸ்ரீ சுவாமிரட்ண சர்மா சுந்தரேசக் குருக்கள்**

அவர்களின் திடீர் மறைவைக் கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா ஸ்ரீ வைகுண் டத்தில் நித்தியவாசம் செய்யப் பிரார்த்திக்கின்றோம்.

**பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள்,**
**ஞாபகார்த்தசபை,**
**நியந்த்ரீ,**
**சிவன்கோவில், நல்லூர்.**

(C-805)


## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு மட்டுமே வழங்கப்படும்
### கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்வரும் காலங்களில் பொலிஸ் பாதுகாப்பு மட்டுமே வழங்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் அரசியல்வாதிகளுக்கு இராணுவப் பாதுகாப்பு அளிக்கப்பட மாட்டாது எனவும், இராணுவம் அரசியல் மயப்படுவதனைத் தவிர்க்கும் நோக்கில் இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வட்டாரத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படும் என குறிப்பிட்ட அவர் ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட சிலரைத் தவிர்ந்த ஏனைய அனைவருக்கும் பொலிஸ் மற்றும் விடேச அதிரடிப் படையினரின் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிட்டபோது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்படவில்லை எனவும், இதுவரை காலமும் வழங்கப்பட்ட இராணுவப் பாதுகாப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இராணுவத்தில் ஒழுக்கத்தை ஏற்படுத்த அரசியல்வாதிகளிடமிருந்து இராணுவத்தினரை விலக்கி வைக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

## ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இரு மாணவர் குழுக்களிடையே மோதல்

(கொழும்பு)

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இரண்டு மாணவ குழுக்கள் இடையில் நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட மோதல்கள் காரணமாக மாணவர்கள் சிலர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான பிரசாந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த இரண்டு மாணவர்கள் களுபோவில வைத்தியசாலையில் தங்கி சிசிக்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இரண்டு மாணவர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிசிச்சை பெற்ற பின்னர் வெளியேறியுள்ளனர்.

ஸ்ரீஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும், இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கும் இடையில் இந்த மோதல் ஏற்பட்டது.

இரும்புக் கம்பிகள், பொல்லுகளுடன் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த மோதலில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது. இதேவேளை பகிடிவதை சம்பவம் ஒன்றே இந்த மோதலுக்கு வித்திட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த நிலையில் மோதலில் சம்பந்தப்பட்ட மாணவர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை மிரிஹான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6)

## மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு தேர்தல் தடையாக அமையாது
### அரசாங்கம் தெரிவிப்பு

இடம்பெயர் மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளுக்கு தேர்தல் ஓர் தடையாக அமையாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

யுத்தம் காரணமாக வடமாகாணத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்களை மீள்குடியேற்றம் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என வடகிழக்கு அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சந்திரா பெர்னாண்டோ் தெரிவித்துள்ளார்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களை எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் மீள்குடியேற்ற முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளில் ஏற்பட்டுள்ள கால தாமதமே மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மந்த கதியில் இடம்பெறக்காரணம் என குறிப்பிட்டுள்ள அவர் சுமார் 70 ஆயிரம் இடம்பெயர் மக்கள் இன்னமும் மீள்குடியேற்றப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார். (6)

# ஆயுதப் போராட்டம்



"காதலன் காதலி" படம் மூலம் ஜெய் ஆகாஷ் இயக்குநர் ஆகிவிட்டார். ரிலீசுக்கு படம் தயாராகியுள்ள நிலையில் "ஆயுதப் போராட்டம்" என்ற படத்தையும் இயக்கி நடிக்கிறார்.

இந்திய தமிழனுக்கும், இலங்கை தமிழனுக்கும் உள்ள உணர்வுப் போராட்டமே கதை. இருவேடங்களில் நடிக்கிறேன். நாயகிகளாக ப்ரித்தி மினாள், அனிதா ரெட்டி நடிக்கின்றனர். சாய் கிரண் வில்லனாக நடிக்கிறார். மற்றும் தீப்பெட்டி கணேஷ், நீரஜ் புரோகித், அதித் ஸ்ரீனிவாஸ் உட்பட 30 பேர் நடிக்கின்றனர்.

இதன் படப்பிடிப்பு தாய்லாந்து, பாங்கொக்கில் தொடர்ந்து 50 நாட்கள் நடத்தப்படும். சீனாவில் பாடல் மற்றும் சண்டைக் காட்சிகள் படமாகிறது. இந்தி, பெங்காலி படங்களில் பணியாற்றிய சாய் சதீஷ் ஒளிப்பதிவு செய்கிறார். நந்தன் ராஜ் இசை அமைக்கிறார். மே மாதம் படத்தை ரிலீஸ் செய்கிறோம் என்றார் ஜெய் ஆகாஷ்.

# கிராமத்து இசையில் கலக்கப் போகும் விஜய் ஆண்டனி



கடந்த எழுபத்தெட்டு வருட தென்னிந்திய சினிமா வரலாற்றில் இதுவரை சொல்லப்படாத கதைக்களத்தை கொண்டுள்ள படம் என்ற பெருமையுடன் உருவாகியிருக்கும் படம் ***அவள் பெயர் தமிழரசி.*** படத்தின் ஹைலைட்களில் முக்கியமானதாக, 5 இலட்சத்திற்கு மேலானோர் கூடும் குலசேகரப்பட்டினம் முத்தாரம்மன் கோயில் தசரா திருவிழாவில் ஒரு சில காட்சிகள் படமாக்கப்பட்டிருப்பதாக சொல்லலாம் என்கிறது ***அவள் பெயர் தமிழரசி*** குழு.

இதுவரை தனது அதிரடி பாட்டுக்களால் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்த இசையமைப்பாளர் விஜய் ஆண்டனி, இப்படத்தில் முதல் முறையாக முழுக்க முழுக்க கிராமத்து பின்னணியில் இசையமைத்திருக்கிறார். அதுவும் இதுவரை கேட்டிராத கிராமிய இசையை இப்படத்தில் கேட்டு ரசிக்கும் கலக்கலாக இசையமைத்திருக்கிறாராம் ஆண்டனி.

# செல்வராகவனின் அடுத்த படம் 'சிந்துபாத்'?



செல்வராகவனின் ஆயிரத்தில் ஒருவன் படம் வெற்றிக்குப் பின்னர் விக்ரமை வைத்து இயக்க உள்ளார். இந்த படத்திற்கு செல்வராகவன் ***சிந்துபாத்*** என பெயரிடலாம் என செய்திகள் வெளியாகியுள்ளன. படத்தில் சுப்பிரமணியபுரம் புகழ் ***சுவாதி*** விக்ரமுக்கு ஜோடியாக நடிக்கலாம் என தெரிகிறது.

மேலும் சிந்துபாத் த்ரில் கலந்த படமாக இருக்கும் என பட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தொடர்ந்து கதை விவாதத்திற்காக செல்வராகவன் மார்ச் முதல் வாரத்தில் அமெரிக்கா செல்கிறார். படத்திற்கு ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைக்க உள்ளார்.

# டைரக்ஷன் இல்லை



அர்ஜுனுக்கு மூன்று படங்கள் உள்ளன. மம்முட்டியுடன் இணையும் ***வந்தே மாதரம்*** ரிலீஸ் திகதி தெரியவில்லை. அடுத்த ***மாசி, மெய்காண்*** படங்களில் நடித்து வருகிறார். இதையடுத்து ஏ.வெங்கடேஷ் இயக்கும் ***வல்லக்கோட்டை*** இருப்பதால், இந்தியில் இயக்கும் படத்தை ஒத்திவைத்துள்ளார். தவிர தெலுங்கு படத்திலும் நடிப்பதால், தமிழில் இந்த ஆண்டு படம் இயக்கவில்லை என்கிறார்.

# மனைவியின் இயக்கத்தில் தனுஷ்

ரஜினியின் மூத்த மகள் மற்றும் தனுஷின் மனைவியான ஐஸ்வர்யா, விரைவில் படம் ஒன்றை இயக்கவுள்ளார். தான் இயக்கும் அந்த படத்திற்கு தன் கணவர் தனுஷை ஹீரோவாக போட ஐஸ்வர்யா முடிவு செய்துள்ளார்.

செல்வராகவனின் ஆயிரத்தில் ஒருவன் படத்தில் உதவி இயக்குநராக பணியாற்றிய ஐஸ்வர்யா தனுஷ், தனுஷுக்காக கதை தயார் செய்து வைத்திருக்கிறாராம்..



திரை விமர்சனம்

# அழகிக்கன்



கடற்கரை குடிசைப்பகுதியில் ரவுடியாக வாழ்க்கை நடத்தும் ஒமேஷ் கேசார், தன்னை துரத்துபவர்களிடமிருந்து தப்பிக்க, காரில் வரும் ஜெயஸ்ரீயை வழிமறிக்கிறார். அவரை தள்ளிவிட்டு காருடன் பறக்கிறார் ஓமேஷ். மக்கர் செய்யும் காரை நடுவழியில் நிறுத்திவிட்டு இறங்கி செல்லும் போது காருக்குள் குழந்தை சத்தம் கேட்கிறது. அக்குழந்தையை எடுத்துச் சென்று தனது வீட்டில் வளர்க்கிறார்.

இதற்கிடையில் குழந்தையை தவறவிட்ட ஜெயஸ்ரீ பொலிசுக்கு தகவல் சொல்ல, அவர்கள் ஒமேஷுக்கு வலை விரிக்கின்றனர். ஒரு கட்டத்தில் மனம் திருந்தி குழந்தையை தாயிடம் ஒப்படைக்க வரும் ஓமேஷை பொலிஸ் சுற்றி வளைக்கிறது. அடுத்து நடப்பது கிளைமாக்ஸ்.

காட்சிக்கு காட்சி ***போகியை*** மீண்டும் பார்த்த உணர்வு. ரவுடி பிச்சைக்காரன் ஹீரோவின் தந்தை என 3 வேடங்களில் நடித்தி நப்பதுடன் இயக்குநராகவும் பொறுப்பேற்றிருக்கிறார் ஓமேஷ் சேசார். கையில் பையுடன் தப்பிவரும் முதல் காட்சியிலேயே ஆர்வத்தை ஏற்படுத்தும் ஓமேஷ், ஆக்ஷன் கட்சிகளுக்காக துறைமுக ரவுடி கூட்டத்துடன் மோதும் காட்சிகள் கதையோடு ஒட்டவில்லை. தூங்கி எழுந்தவுடன் ஒரு மணி நேரம் கண் தெரியாது என்ற செண்டிமெண்ட்டும் பெரிதாக கைகொடுக்கவில்லை.

நண்பர்களுடன் லூட்டி, தோழியுடன் ஊர்சுற்றல் என்று காமெடியாக நகரும் காட்சிகள், குழந்தை கடத்தலுக்கு பின் வேறு திசைக்கு திரும்புகிறது. பைக்குள் குழந்தையை தூக்கிச் செல்வது, அழும் குழந்தைக்கு சஞ்ஜீதாவை மிரட்டி பால் கொடுக்க வைப்பது, தொழில் அதிபர் வேணு அரவிந்தை கட்டிப்போட்டு கொள்ளையடிப்பது, குழந்தை தேடும் படலம், பொலிஸ் துரத்தல் என படிப்படியாக முன்னேறும் காட்சிகள் ஏற்கனவே பார்த்த காட்சிகளாக இருப்பதால் எதையும் ரசிக்க முடியவில்லை.

குழந்தையை பங்களா முன்வைத்துவிட்டு புறப்படத் தயாராகும் ஓமேஷை பொலிஸ் சுற்றி வளைப்பதும் எப்படியும் என்கவுண்டரில் போடப்போகிறார் என்று உறுதியாகிவிட்டது. அழும் குழந்தைக்கு பால்புட்டியை பாண்ட் பொக்கற்றில் கைவிடும்போது அவர் மீது பொலிஸ் நடத்தும் துப்பாக்கிச் சூடு த்ரில். ரோபோ சங்கர் கைக்கடக்கமான கைத்தடிகளை வைத்துக்கொண்டு சிரிப்பு வித்தை காட்டுகிறார்.

# அமீரின் 'ஆதிபகவன்





யோகி படத்தை அடுத்து அமீர் இயக்கும் படத்துக்கு ஆதிபகவன் என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தை அன்பு பிக்சர் சார்பில். ஜெ. அன்பழகன் தயாரிக்கிறார். இதுபற்றி நிருபர்களிடம் அமீர் கூறியதாவது, நான் ஜனரஞ்சகமான படம் இயக்கம் வேண்டும் என்று ஆசைப்பட்டடேன். நான் இயக்கிய ராம் ,பருத்திவீரன் ஆகிய படங்கள் சர்வதேச ரீதியில் விருது பெற்றதால் விருது இயக்குநர் முத்திரை விழுந்துவிட்டது. அதனால் இப்போது கொமர்சியல் படத்துக்கு வந்துவிட்டேன். இது கண்ணபிரான் கதை இல்லை. வெறித்தமான கண்மூடித்தமான காதல் தான் இந்தப் படத்தின் கதை.ஹீரோவாக நடிக்கும் ஜெயம் ரவியை இதில் புதிதாக பார்க்கலாம்.

பருத்திவீரன் இமேஜில் இருந்து விடுபட விரும்புகிறேன். அந்த மதுரை டிரெண்ட் இப்போதும் கொடிகட்டி பறக்கிறது. இந்தப் படத்தில் நான் நடிக்கவில்லை. யுவன் சங்கர் ராஜா இசை அமைக்கிறார். சினேகன் பாடல்கள் எழுதுகிறார். குருதேவ், தேவராஜ் ஒளிப்பதிவு செய்கிறார்கள். ஹீரோயின் முடிவாகவில்லை. அது புதியவராக இருக்கலாம். பிரியாமணியாக கூட இருக்கலாம். வழக்கமாக புதுமுகங்களை என் படங்களில் அறிமுகப்படுத்துவேன். இதில் 25 பேரை அறிமுகப்படுத்த இருக்கிறேன். இவ்வாறு அமீர் கூறினார்.

# ஏப்ரல் விடுமுறையில் 25 புது படங்கள் ரிலீஸ் விஜய், விக்ரம், சூர்யா, கார்த்தி படங்கள் போட்டி





ஏப்ரல் விடுமுறை திரையுலகினருக்கு வசூல் ஈட்டித்தரும் காலம். பாடசாலை விடுமுறை என்பதால் மாணவர்கள் தியேட்டர்களை மொய்ப்பதுண்டு. குடும்பத்தினரும் கூட்டம் கூட்டமாய் வருவார்.

வசூலில் ஆதிக்கம் செலுத்திய சுப்பிரமணியபுரம், பசங்க படங்கள் கோடையில் தான் வெளியாகியது என்பது குறிப்பிடத்தக்கது.

அதுபோல் வரும் கோடை காலமான ஏப்ரல், மே, ஜுன் மாதங்களில் 25 புதுப்படங்கள் திரைக்கு வர தயாராக இருக்கின்றன.

லோரன்ஸ், சந்தியா, லக்சுமிராய் போன்றோர் நடித்த இரும்புக்கோட்டை முரட்டு சிங்கம் படம் ஏப்ரல் 2 இல் வெளியாகிறது. இப்படத்தை சிம்புத்தேவன் இயக்கியுள்ளார். பழைய கவ்பாய் பாட சாயலில் எடுத்துள்ளனர்.

விஜய்யின் சுறா படம் ஏப்ரல் 14இல் திரைக்கு வருகிறது. மீனவர்கள் நலனுக்காக போராடும் இளைஞன் கரக்டரில் விஜய் வருகிறார்.

லிங்குசாமி இயக்கத்தில் கார்த்தி, தமன்னா ஜோடியாக நடித்த பையா படம் மார்ச் 26 ஆம் திகதி ரிலீசாகிறது. அதேநாளில் ஜீவா நடித்த கச்சேரி ஆரம்பம் படமும் திரைக்கு வருகிறது.

விக்ரம் – ஐஸ்வர்யாராய் நடித்த இராவணன் படமும் மே மாதம் வருகிறது. இப்படத்தை மணிரத்னம் இயக்கியுள்ளார். தமிழ், இந்தி என இரு மொழிகளில் வெளியாகிறது.

சூர்யா நடித்து ஹரி இயக்கும் சிங்கம் படம் கோடையில் வருகிறது. ஜெயம் ரவி நடிக்கும் தில்லாலங்கடி, ஆர்யாவின் மதராச பட்டினம், ஷாம் நடித்த அகம் புறம் ஆகிய படங்களும், மே மாதம் திரைக்கு வருகின்றன. இவை தவிர மேலும் 17 சிறு பட்ஜெட் மற்றும் நடுத்தர பட்ஜெட்டில் தயாரான படங்களும் மே மாதத்தை குறிவைத்துள்ளன.

# கால் இடறினாலும் காலை வாராத கால்கொலுசு !



தேனி மாவட்டத்தில் நடந்த ஒரு உண்மை சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எஸ்–பீட்ஸ் என்டர்டெயின்மென்ட் என்ற பட நிறுவனம் தயாரிக்கும் படம் ***கால்கொலுசு.*** சதீஷ் எனும் பட்டதாரி இளைஞர் கால்கொலுசு படத்தில் கதாநாயகராக நடிப்பதுடன், எழுதி–இயக்கவும் செய்வதன் மூலம் தமிழ்த் திரையுலகிற்கு அறிமுகமாக உள்ளார். புதுமுகம் நீது கதாநாயகியாகவும் சஹானா, பிருந்தா என இருவர் கதையின் நாயகிகளாகவும் நடிக்கின்றனர்.

ஆக ஒரு நாயகர் மூன்று நாயகிகள் என உருவாகும் இப்படத்தில் காதலின் வலி காதலர்களுக்கு மட்டுமல்ல காண்பவர்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற கருத்தை மையப்படுத்தி உள்ளதாக கூறும் இயக்குநர் நடிகர் சதீஷ் ஒரு உயிரோட்டமான காதலுக்குள் ஒரு விடலை காதலையும் ஒரு முதிர்ந்த காதலையும் இழையோட விட்டு புதுமையாக திரைக்கதை அமைத்துள்ளாராம்! அட!!

கால்கொலுசு படத்தின் படப்பிடிப்பு தேனி அருகே உள்ள வாலிகண்டபுரம் என்ற இடத்தில் 2000 அடி உயர குன்று மீது சமீபத்தில் நடந்தது. வில்லனின் அடியாட்கள் சதீஷ் ,நீது கோஷ்டியை துரத்தும் சேஸிங் காட்சியில் வேகமாக ஓடும்போது கால் இடறி அத்தனை உயரத்தில் இருந்து கல்குவாரி பள்ளத்தில் இருவரும் உருண்டு , சரிந்து ஒருவழியாக அருகில் இருந்த மரம் செடி கொடிகளை பற்றி உயிர் தப்பி அந்தரத்தில் தொங்கிய அதிசயமும் நிகழ்ந்ததாம். பின்னர் தீயணைப்புத் துறையினர் வந்து இருவரது உயிரையும் காப்பாற்றி படப்பிடிப்பை தொடர்ந்தார்களாம்.

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### இமயம் தொட...

எதிர்கொள்...
பாலை வனத்து ஒட்டகங்கள்
நடக்கவும்
ஓடவும்
உணுவு தேடவும்
புயலை எதிர்கொண்டு
வெற்றி காண்கிறது
எதிர்கொள்
தோல்வியின் விளிம்புதான்
வெற்றியின் ஆரம்பம்.

மாவை. நா.கஜேந்திரா

### காதலின் சிறப்பு

அவனுக்காய் அவளும்
அவளுக்காய் அவனும்
அன்பின் உறைவிடமாய்
காதலின் நிகழ்விடமாய்
இதயத்தினை இடம்மாற்றி
இணைந்த காதல்
இன்று இமயம்தொட
முயல்கிறது

வல்வையூர்
நிலாரசிகன்

### உஷ்...அமைதி இங்கே

அவலங்கள் சுமந்த
அன்னை அவள்
அமைதிகொள்ளட்டும்
ஆறுதல் தீரும்வரை
பாதுகாப்பு வலையம் என
பட்டம் கொடுத்து புதைகுழி
தோண்டிய புனித பூமியிது
பல்லாயிரம் ஆத்மாக்கள்
உறங்கும் உறைவிடம்
பண்டார வன்னியனின்
வழிவந்த பாமரர் வாழ்ந்த
பசுமையான நிலம்
அன்னையின் தாலாட்டில்
வளர்ந்தவர்கள் பலர்
கடல் அன்னை தாலாட்டில்
அவளுள் உறங்குகிறார்கள்
யுத்தத்தால் சிதைபட்ட
அன்னை அவள்
அமைதிகொள்ளட்டும்
ஏனெனில் அவளிடம்
எம் உறவுகள் பல
உறங்குகிறார்கள்

க.தேவன்
(பு.வா.நிலையம் கைதடி)

### சுயநலம்

அந்தகார இருளில்
ஓர் ஆதவனின்.
உதயம்...
அரவமற்ற நிசப்த
பூமியெங்கினும்
அரங்கேற்றுகின்றதே
ஒளியினை...
இரைதேட முடியாத
அரவங்களும்
ஆதவனின்
அஸ்தமனத்திற்காய்
ஏங்கிக் கிடக்கிறன

பொலிகையூர்
பொன்.சுகந்தன்

### நெருடல்கள்

உள்ளே முள்மகுட அரங்கேற்றம்
வெளியே ரோஜா வாழ்த்துக்கள்
அசைவுகள்ால் நெருடல் தாக்க
புதிதாக நித்தம் ஒருரோஜா
பூத்து வாடுகிறது
என் மனதுக்கு
சூழலின் சிற்றுதவி இது!

த.சீதா
யா.பல்கலைக்கழகம்

### காதல்


இதயங்கள் இரண்டறச்
சங்கமித்து
சங்கீதமிசைக்கும்
இனியதொருவேளை
இவள் கண்களிலோ
நாணத்தின் தித்திப்பு
நாளிகைகள் கூட
நினைவில்லை
இவன் மனமோ
ஆர்ப்பரிக்கும் ஆலவட்டம்
காதலின் கனிவில்
தோழியர் கூட துரோகியராய்
அவன் எண்ணங்கள்
மட்டுமே கீதமிசைக்க
கனவிலும் கள்ளமாய்
சிரிக்கும் இன்பசுகம்
கண்டதுவே தெய்வமென
எண்ணும் மனம்
இவர்கள் வார்த்தைகள்கூட
வரமாகுமெனில்
உண்மைக் காதல்
வேறொன்றில்லை

பு.வித்தியா
கட்டப்பிராய்

### அறுவடை

பெருநிலப்பரப்பில்
பெரும்போர் திணித்து
எங்கள் வாழ்வினை
சிதைத்தவன் - அன்று
தேசத்தைக் காத்த
தேசிய வீரன் - இன்று
தேசத்துரோகி...
அரசன் அன்றறுப்பான்
தெய்வம் நின்றறுக்கும்
எம் முன்னோர்
சொன்ன செய்தி
நியமாகிப் போனது
கண்ணாளன் வரவை எண்ணி
காத்திருந்த மனையாளும்
தன் தந்தையைப் பிரிந்து
தவித்திருந்த தனையனுடன்
அன்னையவள் இறந்த செய்தி
அறிந்திடாப் பாலகனும்
பசியால் துடிதுடித்து
விட்டழுத கண்ணிருக்கு
கிடைத்த விலையிது
விதைத்த விதையின்
அறுவடையின் தொடக்கம்

இணுவை சுகந்தி



# மௌனத்தின் தேடல் - 08

### சாரதி

ஆறறிவுள்ள மனிதனே
தூக்கத்தில்
வாகனம் ஓட்டும்போது
நீ ஐந்தறிவுள்ள ஜீவன்தானே
பெரும் தவறில்லை
இருந்தும் போக்குவரத்துப்
பொலிசார் கவனம்

அ.மயூரன்
(சாவகச்சேரி)

### யார் செய்த பாவம்

முன்னொரு காலம்
தமிழருக்குத்தான்
இக்கதி நேர்ந்தது
யார் செய்த பாவத்திற்காய்
இப்போது
வாய்பேசா உனக்கும்
இக்கதி நேர்ந்தது

ப.உதய சித்திரா
(அல்வாய்)

### முதல் சாட்சி நீ

சுகபோக வாழ்க்கையில்
சோம்பேறித்தனமானது
எம் வாழ்க்கையில் மட்டுமா?
உன் வாழ்வும் கூடத்தான்...
என்பதற்கு நீ
முதல் சாட்சி

செ.ரவிசாந்
குப்பிளான்

### மனிதம் இங்கில்லை

காலைமுதல் மாலைவரை
கண்ணுறக்கம் இன்றி
காவல் புரிந்திட்ட பெருமிதத்தில்
கவலைகள் ஏதுமின்றி
கண்மூடித் தூங்குவது — உன்
எஜமானுக்கு எங்கே
புரிந்திடப் போகிறது?
நன்றிகெட்ட மனிதனவன்
துயில்கொள்ளும் உனைக்கண்டு
சீற்றமுடன் வருகின்றான்
மனிதம் இங்கில்லை
எழுந்தோடிச் சென்றுவிடு — உன்
கடமையைத் தொடங்கிவிடு

கி.சரண்யா
தாவடி

### தூங்காதே

நெருத்த உன் தூக்கத்தை விடு
நிமிர்ந்து நில்
நீ காவற்காரன் என்பதனால்,
உன்னை நம்பி எத்தனை உயிர்கள்
நிம்மதியாய் உறங்குகின்றன
அது உனக்குத் தெரியவில்லையா?

நா.கஸ்தூரி
(சங்கானை சிவப்பிரகாச
வித்தியாலயம்)

### விழித்திரு...

பலபேர் தூங்குவதற்காய்
விழித்திருப்பவனே
நீயே தூங்கிவிட்டால்?

ஆழ்வார்

### சுதந்திரம்

எம் தேசத்தில்
நம் ஆழ்ந்த தூக்கம் கூட
அரசியல்வாதிகளின்
கைகளில்
சிக்குண்டிருக்கும்போது
பாவம்!
நீ ஐந்தறிவு ஜீவனாவது
ஆழமாய் உறங்கு...

தி.கோபிநாத்
(மட்டுவில்)

சங்குநாதம்

### நிலவே

வண்ணமாய் திண்ணமாய்
வானிலே உலாவும்
வானிலாவே
தேய்பிறையாய் மறைந்து
வளர்பிறையாய்
என் வாழ்வில் பூத்திட்ட
ஆடவனே
உனக்காக காலமெல்லாம்
காத்திருப்பேன்
என்னை உன்னிடம்
ஒப்படைப்பதற்காய்


எஸ்.சுதர்சனா
(அல்வாய்)

### அன்னை

அன்னை தந்த உயிரிலே
அன்பான வாழ்க்கையாம்
பத்துத் திங்கள் மடியேந்தி
பத்திரமாய் பெற்றவளாம்
சந்தோச வானில்
நாம் பறந்திடவே
சங்கடங்கள் பல
தாங்கினாளாம்
உறவாடும் அன்னையவள்
உயிரோடு கலந்தவளாம்
எம்வாழ்வின் உயர்விற்காய்
எரியும் மெழுகுதிரியானாள்
சுற்றத்தாருடன் சேர்ந்தே
சுகவாழ்வு வாழவைப்பாள்
கண்முன்னே தெய்வமாய்
கண்டிடும் அன்னையை
பாடிட வார்த்தைகளில்லை
பாலூட்டி சீராட்டியவளுக்கு
இந்தஜென்மம் போதாதே
இனியவளைப் போற்றிட
ஆசையுடன்
வேண்டுகிறேன் இறைவனிடம்
நூறு ஆயுள் வாழ்ந்திடவே

வா.நிலானியா
வல்வெட்டித்துறை

# மௌனத்தின் தேடல்- 09




அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 05.03.2010 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஏப்ரல் 18,19 மற்றும் 20-ல் நடத்த ஏற்பாடு

★ 300 இந்திய முதலீட்டாளர் ★ மேலும் 150 வெளிநாட்டு முதலீட்டாளர்

★10 000 உள்நாட்டு தொழிற்துறையினர் பங்கேற்பர்




யாழ்ப்பாணத்தில் தற்போது புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கிறார்கள். இல்லாவிட்டால் தற்போதைய தொழில்களை அபிவிருத்தி செய்கிறார்கள். இந்நிலையில் எதிர்வரும் ஏப்ரல் 18,19 மற்றும் 20 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில், யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை (Jaffna International Trade Fair)நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக வர்த்தக சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இக் கண்காட்சியில் 300 வரையான இந்திய முதலீட்டாளர்கள் கலந்து கொள்வர். அவர்கள் உணவு உற்பத்திக்குப் பயன்படுத்தக்கூடிய நவீன இயந்திரங்களையும் தொழில் நுட்பங்களையும் அறிமுகப்படுத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவர்களின் இயந்திரங்களை கொள்வனவு செய்ய விரும்பின் அரச வங்கிகள் மூலமோ அல்லது தனியார் வங்கிகள் மூலமோ கடன் வசதி பெற்றுத் தரப்படும் எனவும், குறிப்பாக தற்போது அதிகரித்து வரும் கடலுணவு உற்பத்தி தொழிற்துறைக்கான இயந்திரங்களும் கொண்டு வரப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இயற்கை வளம் நிறைந்துள்ளது. இதை இங்கு உணவு உற்பத்திக்குப் பயன்படுத்த வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு இத் துறை இயந்திர வகைகள் காட்சிப்படுத்தப்படும்.

இதேபோல் ஒவ்வொரு துறைக்குமான பங்குபற்றுதலை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறன.

பல,சிறிய மற்றும் நடுத்தர இந்திய முதலீட்டாளர்கள் கலந்து கொள்வர். இதேவேளை இந்தியா தவிர்ந்த 150இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு பிரதிநிதிகளும் கலந்து கொள்வர். அத்துடன் 10 ஆயிரத்துக்கும் அதிகமான உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களும் பங்கேற்பர்என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை இக் கண்காட்சி பல மட்டங்களிலும் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




# அடுத்த பத்தாண்டில் ஏற்றுமதியில் முதலிடத்தை பிடிக்கும் ஐ.ரி.,பி.பி.ஓ.

## ஏற்றுமதி வருமானமும் 22 ஆயிரம் கோடியாகும்

(கொழும்பு)

இலங்கையில் தகவல் தொழில் நுட்ப தொடர்பாடல்துறை மற்றும் பி.பி.ஓ.துறையானது ,2 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் (அண்ணளவாக 22 ஆயிரம் கோடி ரூபாய்)அதிக வருமானம் உழைக்கும் ஏற்றுமதித் துறையாக ,அடுத்த பத்தாண்டுகளில் உருவாகும் என ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இத் துறையானது அடுத்த 5 ஆண்டுகளில்ஒரு இலட்சம்பேருக்கு நேரடி வேலை வாய்ப்பை வழங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு சர்வதேச கணிப்பின்படி; இலங்கையானது இத் துறையில் விரைவாக முன்னேற்றம் அடைந்து வருகிறது.உலக நாடுகள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் பி.பி.ஓ தேவைகளுக்கு தெரிவு செய்யும் இடமாக இலங்கை மாறியுள்ளது. இத் தரப்படுத்தலில் இலங்கை 29ஆம் இடத்திலிருந்து 16ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.


குறிப்பாக கொழும்பானது நிதி மற்றும் கணக்கீட்டு பின் தள மையமாக உருவாகியுள்ளது.

பிரபல சஞ்சிகை ஒன்றின் தகவல்படி ,உலகில் இச்சேவைக்கு சிறந்த இடங்களில் கொழும்பு ஐந்தாவது உலக நகரமாக கணிக்கப்பட்டுள்ளது.

டபிள்யூ.என்.எஸ்.,அம்பாறிசேச் மற்றும் எச்.எஸ்.பி.சி. போன்ற பிரபல நிறுவனங்கள் தங்களுடைய் நிதி மற்றும் கணக்கீட்டுப் பிரிவின் அவுட்சோர்ஸிங் மையங்களை இலங்கையிலேயே அமைத்துள்ளன.

இலங்கையின் தனி நபர் வருமானம்2400 அமெ.டொலர்.இது தெற்காசியாவிலேயே உயர்வானது.

இத்துறையின் இந்த அடைவுக்கு ,உயர் கல்வி அறிவு,உயர் மொழித்திறன் ,திறமையான ஊழியர் படை ,நிதி மூலங்களின் கிடைப்பனவு,அரச ஆதரவு ,சட்ட முறைமை, உட்கட்டுமானம் மற்றும் தொலைத் தொடர்புத்துறை போன்ற பல காரணிகளின் வினைத்திறனே உதவியதாகத் தெரிவிக்கப்படுகிறது.



## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.84 | 115.43 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 173.23 | 176.79 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 153.82 | 157.49 |
| சுவிஸ் பிராங் | 104.73 | 108.00 |
| கனேடிய டொலர் | 106.49 | 109.95 |
| அவுஸ்திரேலிய டொலர் | 100.46 | 103.48 |
| சிங்கப்பூர் டொலர் | 80.48 | 82.38 |
| ஜப்பான் யென் | 1.26 | 1.30 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.48 | |
| ஐக். அரபு இராச்சிய திராம் | சுட்டி விலை 31.15 | |

# சர்வதேச தேயிலை ஏற்றுமதியில் முதலிடத்தை இழக்கும் இலங்கை

(கொழும்பு)

உலகில் தேயிலை ஏற்றுமதியில் முதலிடத்திலிருந்த இலங்கையை பின்னுக்குத் தள்ளி கென்யா அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கென்யாவின் அதிகாரபூர்வ தேயிலை நிர்வாகசபை அளித்த புள்ளிவிபரத்தின்படி,கென்யா 47 உலக நாடுகளுக்கு 342 மில்லியன் கிலோக்கிராம் தேயிலையை ஏற்றுமதி செய்துள்ளது.இது உலக தேயிலை ஏற்றுமதியில் 22 சதவீதமாகும்.


கடந்த வருடம் முன்னணியிலிருந்த தேயிலை ஏற்றுமதியாளரான இலங்கையை தமது நாடு பின்னுக்குத் தள்ளி விட்டதாகவும் ,தொடர்ந்து இதே இடத்தைத் தக்கவைத்துக் கொள்ள கென்யா முயற்சி செய்வதாகவும் கென்யாவில் கடந்தவாரம் இடம்பெற்ற ஐக்கிய அரபு நாடுகளின் வர்த்தகக் கருத்தரங்கில் கலந்து கொண்ட கென்ய அதிகாரியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேயிலை ஏற்றுமதியில் முதலிடத்தில் இருந்த இலங்கை கடந்த வருடம் 29 மில்லியன் கிலோக்கிராம் வீழ்ச்சியிலும் 280 மில்லியன் கிலோக்கிராம் தேயிலையை ஏற்றுமதி செய்துள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



கடந்த சில வருடங்களாக மோசமான காலநிலை மற்றும் சர்வதேச சந்தை வீழ்ச்சியினாலும் பாதிக்கப்பட்டு ஏற்றுமதியை இழந்திருந்த கென்யாவிற்கு இப் புதிய வளர்ச்சி உத்வேகத்தை அளித்திருக்கும்.

# ஜப்பானிய ஜிகா நிறுவன உதவியுடன் கப்பற்றுறை நவீனப்படுத்தல் கருத்தரங்கு



(மனிலா)

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் (ஜிகா), கடற்றொழில்துறை அதிகாரசபை (மரினா) உடன் இணைந்து ஒரு நாள் உள்நாட்டு கப்பல்துறை நவீனப்படுத்துதல் கருத்தரங்கை கடந்த செவ்வாய்க்கிழமை மனிலாவில் நடத்தியது.

இக் கருத்தரங்கில் போட்டித் தன்மைக்கிடையில் கப்பல் பாதுகாப்பு மற்றும் கப்பல் மீளக்கட்டுதல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டது. இக் கருத்தரங்கில் இலங்கை அரச மற்றும் இத்துறை சார்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பிலிப்பைன்ஸுக்கு இத் துறையில் உள்ள உயர் நிபுணத்துவம் குறித்தும் ஆராயப்பட்டது.

## துணை ஆளுநராக பி.டி.ஜே.பெர்னாண்டோ



மத்திய வங்கியின் புதிய துணை ஆளுநராக பி.டி.ஜே.பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

பிடிஜேபெர்னாண்டோ மனிதவள முகாமைத்துவம், முகாமைத்துவக் கணக்காய்வு,புள்ளி விபரவியல் தகவல் தொழில் நுட்பம்,நாணயத் தொழிற்பாடு, நிதி, பணிமனை,பாதுகாப்புப் பணிகள் உட்பட்ட துறைகளில் 33ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டவர். அத்துடன் அவர் நாணயச் சபைக்கான செயலாளராகவும் செயற்பட்டு வருகிறார்.முன்னர் அவர் ஏறத்தாழ 5 ஆண்டுகள் உதவி ஆளுநராக பதவி வகித்திருந்தார்.

# கொமர்ஷல் வங்கியின் முடிபடைந்த காலாண்டு வருமானம் 8.3%.உயர்வு

கொமர்ஷல் வங்கியின் முடிபடைந்த காலாண்டு வருமானமானது 8.3 வீதம் அதிகரித்து ஆயிரத்து 207 மில்லியன் ரூபாயாகவும், முழு ஆண்டுக்குமான வருமானம் 1.7 வீதம் உயர்ந்து 4 ஆயிரத்து 191 மில்லியன் ரூபாயாகவும் அதிகரித்துள்ளது என கொமர்ஷல் வங்கி தெரிவித்துள்ளது.

இவ் வங்கியின் பங்களாதேஷ் பிரிவானது 644மில்லியன் ரூபாயை தேறிய இலாபமாக உழைத்துள்ளது.இது இக் குழும வருமானத்தில் 14.5 சதவீதமாகும்.

எங்களுடைய வாடிக்கையாளர்கள்,வங்கியால் ஏற்றுக் கொள்ளக்கூடிய சில காரணிகளால் பாதிக்கப்பட்டிருப்பின் அவர்களின் கடன் செலுத்துகை ஒழுங்கு,வாடிக்கையாளர் கேட்டுக் கொண்டால் மாற்றி அமைத்துத் தரப்படும் எனவும் வங்கி உயர் அதிகாரி அமிதா குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வங்கியின் மொத்த தேறிய சொத்து 28.7பில்லியன் ரூபாய் என வங்கி தெரிவித்துள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 3807.86 | 25.61 |
| மிலங்கா விலைச்சுட்டி | 4354.73 | 7.46 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 787.25 | |

***உயர்வடைந்த பங்குகள்*** : சிறிலங்கா ரெலிகொம்,டிமோ ,கார்ஷன் , சம்பத் வங்கி ,ரான்ஸ் ஏசியா ஹோட்டல்.

***சரிவைக்காட்டிய பங்குகள்.*** என்வெயர்மென்டல் றிசோசஸ்,கொமர்ஷல் வங்கி,சிலோன் தியேட்டர்ஸ்,லங்கா ஹொஸ்பிட்டல்,லங்கா ஐ.ஓ.சி.

கு.முருகதாஸ்

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுதேச மருத்துவத் துறைசார் மனித வள அபிவிருத்திக்கும் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் செயற்பாட்டுக்கு மான நிலை யம் நாளை திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் சுன்னாகம் மின்சார நிலையத் தின் அருகாமையில் திறந்து வைக்கப்படவு ள்ளது.

சுதேச மருத்துவ அமைச்சர் திஸ்ஸ கரலி த்த, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் தலைமையின் கீழ் திறந்து வைக்கப்பட வுள்ளது.

துறைசார் ஆர்வலர்கள்,நலன்விரும்பிகள், சமூக பெரியார்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு வடமாகாண சுதேச மருத்து வப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (6-4)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் நடத்தும் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 5.30 மணி வரை சித்தன்கேணி இளைஞர் முன் னேற்றக்கழக மண்டபத்தில் நடைபெறவு ள்ளது.

இதில் அனைவரும் கலந்து கொண்டு உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின் றனர். (4-17)

## சுற்றாடல் பாதுகாப்பு வரி மீளளிக்கப்படவுள்ளது

கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு 2010 ஆம் ஆண்டுக்கான மோட் டார் வாகனவரி அனுமதிப்பத்திரத்துடன் செலுத் தப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு வரி மீளளிக்கப் பட வுள்ளது. வரி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டவர்கள் பணம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் வந்து எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னதாக பெற் றுக்கொள்ளுமாறு கரவெட் டிப் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் அறி வித்துள்ளார். (ச-14)

# மாசிமக உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலயத்தின் மாசிமக உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் பகல் சங்காபிஷேகமும் மாலை திரு விளக்கு பூசையும் நடைபெற்று அம்பாள் திரு வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (6-4)

# அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியைச் சேர்ந்த தொழிலதிபர் வே. சிவனேஸ்வரன் என்பவர் நீர்வேலி றோ.க. த.க.பாடசாலைக்கு சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பாண்ட் வாத்திய இசைக்கருவியினை அன்பளிப்பாக வழங் கியுள்ளதாக பாடசாலை சமூகத்தினர் தெரிவி க்கின்றனர். (6-4)

# கைத்தறி அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்குமாகாண சபை தொழிற்துறைத் திணைக்களத்தின் கைத்தறி அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக .கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளது.

இக்கூட்டம் வடமாகாண தொழிற்துறைத் திணைக்கள பணிப்பாளர், புடவைக்கைத் தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகி யோரால் நடத்தப்படவுள்ளதால் சகல தனி யார் கைத்தறி நெசவாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு திணைக்களத்தின் மாவட்ட அலுவலர் பொ. பௌராஜ் தெரி வித் துள்ளார். (6-4)

# இல்ல மெய்வல்லுனர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரட்ணம் மத்திய மகா வித்தி யாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல் லுனர் போட்டி நாளை மறுதினம் செவ் வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாட சாலை மைதானத்தில் அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முல் லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரும் பழைய மாணவியுமான திருமதி எமல்டா சுகு மார் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந் தினராக கொழும்பு பழைய மாணவர் சங்க உறுப்பினர் ரி.சிவநாதன் கலந்து கொள்ளவு ள்ளார். (6-4)

◆ ◆ ◆

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடா ந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங் கை வங்கியின் முன்னாள் முகாமையாளரும் பழைய மாணவரும் சுன்னாகம் யூனியன் வங்கியின் முகாமையாளருமான ந.சச்சி தானந்தம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விரு ந்தினராக பவுன்கவுஸ் உரிமையாளர் த.கந் தசாமி கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக் கான பரிசில்களை திருமதி கிருஸ்ணகுமாரி சச்சி தானந்தம்,திருமதி கலாவதி கந்தசாமி ஆகி யோர் வழங்கி கௌரவிக்கவுள்ளனர். (6-4)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சமூக அபிவிருத்தி மன்றத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய பணிப்பாளர் தெரி வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மன்ற அலுவலகத்தில் தலைவர் திரு மதி ஜெகமணி ஜோசப் தலைமையில் நடை பெறவுள்ளது. (ச-14)

# இராசி பலன்

28-02-2010
(மாசி 16, ஞாயிற்றுக்கிழமை)
பூரணை முன்னிரவு 10.56 மணி வரை
மகம் மாலை 6.25 மணி வரை
இராகு காலம் 4.58-6.28 மணி வரை
சுபநேரம் 9.28-10.58 மணி வரை
இரண்டாம் தவக்கால ஞாயிறு
போயா நோன்மதி -பூரணை விரதம், மாசிமகம்

| | |
|---|---|
| மேடம் | அதிக பிரயாசை, தாழ்ந்த சுபாவம், பெரியோரால் மதிக்கப்படுதல், தன விரயம். |
| இடபம் | புதிய தகவல்,பயந்த சுபாவம், உறவினர் சந்திப்பு,ரோக நிலை. |
| மிதுனம் | இனிய சம்பவம், சகோதரர் உதவி, வாக்கு மேன்மை,காரிய சித்தி |
| கடகம் | குடும்பக் கவலை, கடின முயற்சி, கௌரவக்குறைவு, தனவிரயம் |
| சிங்கம் | ஆழ்ந்த சிந்தை சயன சுகம் , முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை. |
| கன்னி | பிதா வழி உறவு, தொழில் விருத்தி, தேக நலன்,பிரயாணம். |
| துலாம் | மனமகிழ்ச்சி ,காரிய அனுகூலம், போசன சுகம், பெருமையடைதல் |
| விருச்சிகம் | சுப நிகழ்வு, தூரதேசச் செய்தி, அதிகாரம்,நண்பர்கள் உதவி. |
| தனுசு | அதிக பிரயாசை வீண் பயம்,திடீர் பயணம், தனவிரயம். |
| மகரம் | ஆரோக்கியக் குறைவு, போசன சுகம், வீண்பகை, முயற்சி தாமதம். |
| கும்பம் | அபூர்வசந்திப்பு ,செல்வாக்கு, பய ணம் ,காரிய சித்தி. |
| மீனம் | சுகவாழ்வு, சத்துஜெயம், போசன நன்மை, தொழில் சிந்தை. |

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## நியாயக் கோடுகள்

"என்ன இது... நெடுநேரமாக இந்த இடத்திலேயே நின்று கொண்டிருக்கிறீங்க?"

"என்னைச் சுற்றி என்ன போட்டிருக்கிறது என்று பாருங்க..."

"என்னது... கோடு போட்டிருக்கும். என்ன வளையம் இது?"

"பழங்காலத்தில் ஒரு பழக்கம் கேள்விப்பட்டிருக்கி றீர்களா? அதாவது ஒருவர் கொடுத்த கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லை என்றால் கேட்டுப் பார்ப்பார்கள். அப்படியும் அவன் நழுவிப் போய் விட்டான் என்றால் அவனுக்குப் பின்னால் நைசாகப் போய் அவன் நிற்கும் இடத்தில் ஒரு வட்டம் போட்டு விடுவார்கள். அதைத் தாண்டி அவன் வெளியே வரக்கூடாது. தனக்குக் கடன் கொடுத்தவருக்குத் தகுந்த நபர் ஒருவரின் பிணையில் அல்லது கடனைக் கொடுத்துவிட்டுத்தான் வெளியில் வர வேண்டும். நியாயத்துக்குக் கட்டுப்படும் ஊர் இது."

"இப்பொழுதும் அப்படித்தானா?"

"இது வேறமாதிரி சேர். காலம் ரொம்ப மாறிப் போச்சு

"என்ன சொல்றீங்க?"

"நான் கடன் வாங்கியவன் இல்லை. கடன் கொடுத்தவன். கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்பதற் காக வந்தேன். வந்த இடத்தில் இப்படியாகிவிட்டது. என்னிடம் கை நீட்டிக் கடன் வாங்கியவனே இப்படி என்னைச் சுற்றிக் கோடு போட்டுவிட்டு 'இதைத் தாண்டி வந்தால் குதித்துவிடுவேன்' என்று பய முறுத்தி விட்டுப் போயிருக்கிறான் சேர்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 90 | 100 | 100 |
| தக்காளி | 50 | 60 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 40 | 40 |
| கோவா | 60 | 90 | 60 |
| கரட் | 80 | 90 | 100 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 60 | 70 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 70 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 100 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 90 | 60 |
| கரணைக்கிழங்கு | 25 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | - |
| முருங்கைக்காய் | 600 | 650 | - |
| போஞ்சி | 60 | 70 | 60 |
| கத்தரி தம்புள்ள | 30 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 80 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# மக்கள் வங்கி

சுன்னாகம் , பருத்தித்துறை , நெல்லியடி

## மத்திய மயப்படுத்தப்பட்ட தரமுயர்த்திய கணினி வங்கிச் சேவை தொடக்கவிழா

எமது மக்கள் வங்கி சுன்னாகம், பருத்தித்துறை நெல்லியடி கிளைகள் மத்திய மயப்படுத்தப்பட்ட தரமுயர்த்திய வங்கி கணினி வலையமைப்புடன் ஒன்றிணைக் கப்படவுள்ளன என்பதனை எமது பெறுமதிவாய்ந்த வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

**சுன்னாகம் கிளை (109)**

திகதி : 2010.03.01
நேரம் : மு.ப.09.00 மணி
பிரதமவிருந்தினர் : திரு. P.விக்னேஸ்வரன்
(வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம்)

**பருத்தித்துறை கிளை (285)**

திகதி : 2010.03.01
நேரம் : மு.ப.10.00 மணி
பிரதமவிருந்தினர் : பேராசிரியர் M.நடராஜசுந்தரம்
(வணிக முகாமைத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

**நெல்லியடிக் கிளை (106)**

திகதி : 2010.03.01
நேரம் : மு.ப.11.00 மணி
பிரதமவிருந்தினர் : திரு.V. செல்வராஜா
(வலயக்கல்விப் பணிப்பாளர், வடமராட்சி)

**இந்நிகழ்வில் பிரதமவிருந்தினருடன் கலந்து சிறப்பிக்கும் விருந்தினர்கள்**

திரு. T.K.ஆனந்தராஜா
(உதவிப் பொதுமுகாமையாளர்,வட வலயம்)

திரு .S. பத்மநாதன்
(பிராந்திய முகாமையாளர், யாழ்ப்பாணம்

திரு. S.ஹென்றி
(உதவிப் பொதுமுகாமையாளர், யாழ்ப்பாணம்

அன்றைய நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

நன்றி

பிரதேச முகாமையாளரும் ஊழியர்களும்,
முகாமையாளரும் ஊழியர்களும், சுன்னாகம் – (109)
முகாமையாளரும் ஊழியர்களும், பருத்தித்துறை – (285)
முகாமையாளரும் ஊழியர்களும், நெல்லியடி – (106)

(சி/4520)


## ஊடகவியலாளர் பிரகீத் காணாமல் போனமைக்கும் மட்டக்களப்பு பிரதேசத்திற்கும் தொடர்பு?

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் ஹெக்நெலிய கொட காணாமல் போனதற்கும் மட்டக்களப்பு பிரதேசத்திற்கும் தொடர்பிருப்பதாக சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வரும் பொலிஸ் குழுவினர் கண்டறிந்துள்ளனர். இந்த சம்பவம் குறித்து தொலைபேசி வலையமைப்பு தொடர்பில் மேற்கொண்ட விசாரணைகளில் இந்த தகவல் தெரியவந்துள்ளதுடன் பல முக்கிய தகவல்களும் கிடைத்துள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பிரகீத் உயிருடன் இருக்கின்றாரா இல்லையா என இதுவரை கண்டறியப்படவில்லை என கூறியுள்ள அந்த அதிகாரி தொலைபேசி வலையமைப்பு தொடர்பில் மேற்கொண்ட விசாரணைகளில் நடத்துவதற்காக மட்டக்களப்பு மற்றும் பொலனறுவை பிரதேசங்களுக்கு சென்றுள்ள.பொலிஸ் குழுவினர் இரகசியமான முறையில் விசாரணைகளை நடத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (6)

## கண்காணிப்புக் குழுக்கூட்டம்

சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான தலைவர்களுக்கான மாவட்ட கண்காணிப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு நிறுவனத் தலைவர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு சுகாதார சேவைப் பணிப்பாணிப்பாளர் கேட்டுக் கொள்கிறார். (6-13)

## மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெற்று வெற்றிபெறுமிடத்து ஜி.எஸ்.பி.யை பெறலாம்

### அமைச்சர் யாப்பா நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்று வெற்றிபெறுமிடத்து ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை உள்ளிட்ட வெளிநாடுகளின் அனைத்து விதமான உதவிகளையும் பெற முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்புக்கு நாட்டு மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்றுக்கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

அவ்வாறு எங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடைக்கும் போது எமது நாடு தொடர்பான உலகத்தின் தற் போதைய பார்வை மாற்றம் அடையும் என்று நம்புகின்றோம்.

மேலும் உலக நாடுகளின் கண்கள் திறக்கப்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. அதன்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையை எம்மால் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் உலக நாடுகளின் அனைத்து விதமான உதவிகளையும் எம்மால் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது என்றார். - (6)


# மணிவிழா நாயகனுக்கு பிறந்த நாள் வாழ்த்தும் பிரியாவிடையும்



**உயர்திரு நடராஜா சிவரட்ணம்**
**(உதவி பொது முகாமையாளர், இலங்கை வங்கி- வடமாகாணம்)**


40 ஆண்டுகள் வங்கிச் சேவையில் ஈடு இணையற்ற சேவையாற்றி தன் சுய திறனாலும் ஆளுமையாலும் வடமாகாண மக்களிடையே இலங்கை வங்கியின் சேவைகளுக்கு ஒரு தனித்துவமான இடத்தை உருவாக்க அல்லும் பகலும் பாடுபட்ட தங்கள் சேவையினை எந்நாளும் நினைந்திருப்போம்.

தங்கள் ஓய்வுக் காலம் சிறப்பானதாக அமைய எமது இனிய வாழ்த்துக்கள்!

யாழ். மாவட்ட இலங்கை வங்கி ஊழியர்
நலன்புரிக் கழகம்
யாழ்ப்பாணம்.

(சி/4518)

# மகப்பேற்று விடுதி திறப்பு விழா



(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மகப்பேற்று விடுதியின் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு வைத்திய கலாநிதி ப.ஏகாம்பரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர். இரவீந்திரன் கலந்து கொண்டு கட்டத்தை திறந்து வைக்கவுள்ளார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஏ.ஈ.ஞானசோதி, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ. கேதீஸ்வரன், யாழ். மலேரியா தடை இயக்க பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே. ரி.சிவபாதம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6-4)

# அமைதிச் சூழலைக் குழப்ப சர்வதேச நாடுகள் முயற்சி

## ஜாதிக ஹெலஉறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தமிழ் சிங்கள மக்களிடையே பிரிவினைவாதத்தைத் தோற்றுவிக்க சர்வதேசம் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் வெளிப்பாடுகளே உலகத் தமிழர் பேரவை மாநாட்டில் பிரித்தானிய பிரதமர் கோர்டன் பிறவுண் மற்றும் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபான்ட் ஆகியோர் கலந்துகொண்டமையாகும்.

இவ்வாறான செயற்பாடுகளினால் இலங்கையின் தேசியப்பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதுடன் நாட்டின் இறையாண்மைக்கும் ஆபத்து தோன்றியுள்ளது என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இந்நிலை தொடருமாயின் பொது மக்களின் போராட்டங்களையும் அதற்கு அப்பால் சென்று எதிர்ப்பு நடவடிக்கைகளையும் இலங்கையிலுள்ள அந்நாட்டின் தூதரகங்கள் சந்திக்க நேரிடும் எனவும் அவர் எச்சரித்தார்.

சர்ச்சைக்குரிய உலக தமிழர் பேரவை மாநாட்டில் பிரித்தானிய அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டமை தொடர்பாக தெளிவுபடுத்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

இலங்கையில் இன்று புலிப்பயங்கரவாதிகள் தோற்கடிக்கப்பட்டு பிரிவினைவாத ஆயுதப் போராட்டம் முடிவிற்கு வந்துள்ளது.

சகல இன மக்களும் ஒற்றுமையாக சமாதானத்துடன் வாழக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான அமைதிச் சூழலைக் குழப்புவதற்கு சர்வதேச நாடுகள் சில முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

சர்வதேச நாடுகளில் வாழும் புலி ஆதரவாளர்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு உயிரூட்டும் வகையில் பிரித்தானியா போன்ற நாடுகள் ஊக்குவிப்பதை இலங்கை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது. உள்நாட்டின் சில சூழ்ச்சிதாரிகளும் மேற்படி சூழ்ச்சிகளுக்கு உதவி செய்கின்றமை கவலையளிக்கின்றது எனக் கூறினார். (6)

# வடபகுதியில் சகல வசதிகளுடனும் கூடிய

# 7 மேல் நீதிமன்றங்களை ஸ்தாபிக்க தீர்மானம்

(கொழும்பு)

வடபகுதியில் சகல வசதிகளுடனும் கூடிய 7 மேல் நீதிமன்றங்களை ஸ்தாபிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம், ஊர்காவற்றுறை, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் இந்த மேல் நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளதாக நீதி மற்றும் நீதி மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

வடமாகாண மக்களின் அடையாளம் மற்றும் கலாசாரத்திற்கேற்ப இந்த நீதிமன்றங்கள் ஸ்தாபிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

வட மாகாண நீதிமன்றங்களில் யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்திற்கு மாத்திரமே நிலையான கட்டடம் இருப்பதாக தெரிவித்த அமைச்சர், ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, மல்லாகம் போன்ற பிரதேசங்களில் நீதிமன்றம் இயங்கிய போதிலும் அவை தனியாருக்கு சொந்தமான கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன எனவும் குறிப்பிட்டார்.

மேலும் வடபகுதியில் மேற்கொள்ளும் நீதிமன்ற கட்டமைப்பின் அபிவிருத்தி களுக்கான நிதியு தவி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் கூறினார். (6)

# பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளது

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலை 2006/2007 ஆம் கல்வியாண்டுக்கான இறுதிப் பரீட்சை பெறுபேறுகள் கல்வித்திணைக் களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப் பெறுபேறுகளை ஆசிரியர்கள் ஆசிரிய கலாசாலை விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் எனவும் 2007-2008 ஆம் கல்வியாண்டுக்கான ஆங்கில நெறியினருக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதற்கான அனுமதி அட்டைகள் எதிர்வரும் 3ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாக பலாலி ஆசிரியர் கலாசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார். (6-4)

# சவால்களைச் சாதனைகளாக்கிய சாந்தி விக்னராசா

## நூல் விமர்சனம்

சாந்தியின் குடும்பத்தினரால் தொகுக்கப்பட்டு இலங்கை உயர் நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு க. ஸ்ரீபவன் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்ட திருமதி கீதா ஜொாஜ் சாந்தகுமாரி விக்னராசா அவர்களின் ஞாபகார்த்த மலரைப் படித்தபோது மேலைத்




தேயப் புலவர்களுடைய கல்லறைப் பாடல்களைப் படிப்பதுபோலவும் புறநானூற்றுப் புலவர்களின் நடுகற் பாடல்களைப் படிப்பது போலவும் இருந்தது. அதற்கு மேலாக இம் மலர் அறிவு, ஆறுதல், நல்லிணக்கம், நேர்மை, நெஞ்சுரமை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை எமக்கு ஊட்டுவதாகவும் அமைகின்றது. இதனை ஆக்கிய சங்கீதா, சவீந்திரா, சஞ்சேந்திரா ஆகிய சாந்தி விக்னராசாவின் பிள்ளைகள் ஆங்கில மொழியில் இம்மலர் வெறுமனே மிகவும் நேசிக்கப்பட்ட எங்கள் அம்மாவின் வாழ்வு பற்றிய நயப்புரைகளையும், சான்றுகளையும் தொகுத்துத் தரும் தொகுதியல்ல. இது ஒரு வியத்தகு வாழ்வுக்கு நன்றி கூறுவதாகவும் துயர் பகிர்வதாகவும் துயர் வெளிப்பாடாகவும் அமைந்தது என்று கூறியிருப்பது மிகவும் பொருத்தமாகவுள்ளது.

"உலகுக்குக் காதல் கடிதம் அனுப்பும் ஆண்டவருடைய கையிலே நான் ஒரு சிறிய பென்சில்" என்று சாந்தி வழங்கிய ஓர் அருமையான வாசகம் மலர் முன் அட்டையிலே தரப்பட்டுள்ளது. எழுதிச் செல்லும் விதியின் கை என்று ஓமர் கய்யாம் பாடினான். அதற்கு மாறாக எழுதிச் செல்லும் இறைவனின் கை இங்கே நினைவுகூரப்பட்டுள்ளது.

ஆண்டவரே கையிலே சாந்தி ஒரு சிறிய பென்சிலாக இருப்பதென்பது மிக அரிய தெய்வீகக் கலைக் கோலமாகும்.

இந்த மலரிலே "சாந்தியின் வாழ்வுடன் வாழும் கணவர்" விக்னராசா "சவால்களைச் சாதனைகளாக்கிய சாந்தியின் வாழ்க்கை வரலாறு" எழுதியுள்ளார். உரைநடையிலே அமைந்ததாயிருப்பினும் அப்பகுதியினைப் படிக்கும்பொழுது ஒரு நீண்ட கவிதைக் கதையினைப் படிப்பதுபோல இருந்தது. பனிஸ் புதியசுவை கொடுத்த இடம், நெருப்பாறு கடந்து சென்று கணவனைக் காப்பாற்றிய சாவித்திரியை நினைவூட்டும் இடம் அற்புதமாக அமைகின்றன. யாழ்ப்பாணக் கல்லூரியிலே இளையவர்களாக விக்னராசாவையும் சாந்தியையும் கண்டிருக்கிறேன். அவர்களுடைய வாழ்வின் உயர்வினைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். இவ்வரலாற்றைப் படித்தபோது மனது கரைந்தது. இறைவனுள் சேர்வதற்கு சாந்திக்கு ஏன் இந்த அவசரம்? என்று நான் எண்ணினேன். நாகா, ரோஹினிமற்றும் நிரு எழுதிய ஆங்கிலக் கவிதையும் இதே கேள்வியைத்தான் கேட்கின்றது.

you were in such a mighty hurry
To serve humanity Such haste
As if you felt your clock was ticking fast
Lest you might not have enough time to last

வாசிக்க நெஞ்சை உருக்கும் இன்னொரு கட்டுரை நாம் நன்கு அறிந்த பிரபலம் வாய்ந்த ஊடகவியலாளர் திரு (D.B.S. ஜெயராஜ் ஆங்கிலத்தில் "My Friend Shanthi A P ersonal Tribute" என முதிய பகுதியாகும். வாழ்ந்த வாழ்வும் வளமும் கண்ணைப் பனிக்க வைக்கும் முடிவும் பற்றி அற்புதமான மொழி நடையிலே எழுதப்பட்டுள்ளது.

விக்னராஜாவும் ஜெயராஜும் இரு இலக்கியங்கள் படைத்துள்ளனர்.

பெருந் தொகையான அஞ்சலிச் செய்திகளைக் கொண்டதாக இம் மலர் அமைகின்றது. சமயத்தலைவர்கள், அமைச்சர்கள், நீதியரசர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டத் தரணிகள், பல்கலைக்கழகச் சமூகத்தினர், நண்பர்கள் என அஞ்சலிச் செய்தி அனுப்பியவர்களைப் பட்டியலிடலாம். செய்தி அனுப்பிய பெரும்பாலானவர்கள் சாந்தியினுடைய புன்னகை பற்றிக் குறிப்பிட்டு மனம் நெகிழ்ந்துள்ளனர் "என்றும் இன்முகத்துடன் புன்சிரிப்பு நிறைய" என்றும் "புன்னகைக்குள் புனித மும் புகழ் விரும்பாக் கொள்கையும்" என்றும் "The smile is her Trade Mark "Even after a day 's work both at the University and home the smile never fades. The smile is the same whether you are a prince or a pauper" என்றும் "Always with a smiling face and a cheerful disposition" என்றும் கூறப்பட்டுள்ளன.

சாந்திக்குத் தூவப்பட்ட கவிதை மலர்கள் பல துயர் பகிர்வனவாகவும் துயர் துடைப்பனவாகவும் நயம் மிகுந்த பாடல்களாகவும் அமைகின்றன. குறிப்பாக ஆங்கிலத்திலெழுதப்பட்ட பாடல்களே இச் சிறப்புகளுடையனவாக அமைகின்றன. வி. பரந்தாமனுடைய ஆங்கிலக் கவிதை நாம் பலவீனமுறும் போது எங்களுக்குச் சக்தி தருகின்றது. நாம் உயர் வடையும்போது எங்களைப் புகழ்கின்ற நாம் மத்தியிலிருந்து விலகும்போது எங்களுக்குக் கவனம் சொல்லுகின்ற எங் கள் நாளாந்த கருமங்களை நடத்துவதற்கு எங்களைத் தயார்ப்படுத்துகின்றன. நாம் இலட்சியத்தினை இழக்கும் போது எங்களைத் தாலாட்டி படுத்துகின்ற தனித்துவமான தாய் என்று சாந்தியைக் குறிப்பிடுகின்றது. ஆங்கிலத்தில் அவர் நயமிக்க சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். இது போன்ற பல கவிதைகள் இம் மலரிலே இடம்பெற்றுள்ளன.

இம் மலரினுடைய இன்னொரு சிறப்பு செத்தும் கல்விக்கொடை கொடுக்கும் பண்பாகும். சாந்தி எழுதிய ஆய்வுக் கட்டுரைகளும் அறிக்கைகளும் விக்னராசாவினுடைய கருத்துச் செறிவுடைய கட்டுரைகளும் சொற்பொழிவுகளும் மொழி , சட்டம் ,அரசியல், பயிலும் மாணவர்களுக்குப் பெரிதும் உதவக்கூடியன. துயர்பகிர்வுக்கு மேலாக கல்விப்பகிர்வும் செய்வதாக இம்மலர் விளங்குகின்றது. இம் மலருக்கு அணிந்துரை எழுதிய செஞ்சொற் செல்வன் ஆறு.திருமுருகன் கல்வெட்டில் இறப்பும் பேசப்படும் இம்மலரில் வாழ்வும் வள மும் வாழ்ந்த பாதையும் பேசப்படுகிறது. இம் மலரைப் படிப்பவர்கள் அம்மலருக்குரிய வரை மட்டுமன்றி தம் வாழ்வினையும் நின்று நினைக்க வழி காட்டும் என்று கூறியிருப்பது பொருத்தமாயமைகின்றது.

மனம் தளரும்போது, சவால்களை எதிர் கொள்ளும்போது, அமைதிவேண்டி நிற்கும் போது இம்மலரினை எடுத்து வாசியுங்கள், அந்தச் சின்னப்பென்சில் உங்களுக்கும் ஆண்டவரிடமிருந்து ஆறுதல் கடிதம் வரைவிக்கும்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ்

அவரவர் சக்திக்குத் தகுந்த வேலையை செய்வது புத்திசாலித்தனம். இருதயநோய் உள்ளவன் பளுவான இரும்பை தூக்கக்கூடாது. -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஏன் மக்காள் இவ்வளவு பேர்?

யாழ். மாவட்டத்தில் இருந்து எட்டு வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக 324 பேர் போட்டியிடுகின்றனர்.

அரசியல் கட்சிகள் தவிர பன்னிரண்டு சுயேட்சைக்குழுக்கள் போட்டியிடுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜனநாயக நாட்டில் எவரும் போட்டியிடலாம் என்பதால் இதுபற்றி எந்த விமர்சனங்களையும் நாம் முன்வைக்க விரும்பவில்லை.

ஏனெனில் ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் பத்திரிகையும் ஒன்று.

எனவே பத்திரிகைகள் ஜனநாயகத் தன்மையை இழந்து செயற்படலாகாது.

நடுநிலையோடு இயங்க வேண்டும் என்பது கட்டாயம். எனினும் ஜனநாயகம் என்பதற்காக எதையும் அனுசரிக்க வேண்டும் என்ற வரையறையும் கிடையாது.

எனவே உள்ளதை-யதார்த்தத்தை பத்திரிகைகள் துணிந்து சொல்லவேண்டும். அந்தத் துணிவை மக்கள் ஏற்க வேண்டுமாயின் பத்திரிகையாளர்கள் பக்கம் சாராதவர்களாக இருப்பதும் அவசியம். பக்கம் சார்ந்து கொண்டு எதைக் கூறினாலும் அது பக்கச் சார்போடு பார்க்கப்படும் என்பது நிதர்சனம்.

எனவே நாம் பக்கசார்பின்றி யாழ். மாவட்ட தேர்தல் பற்றி நோக்குவோமாயின்,

எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக (போனஸ் தவிர) 324பேர் போட்டியிடுவதன் மூலம் வாக்குகள் சிதறிப்போகும் வாய்ப்பு உள்ளது என்ற உண்மையை கூறித்தான் ஆகவேண்டும்.

324 பேரில் எட்டுப் பேரைத் தவிர 316பேர் தோற்பது உறுதி. இந்த 316 யார் என்பது உரியவர்களுக்கும் பொதுமக்களுக்கும் நன்கு தெரியும்.

தோற்பது நிச்சயம் என்பது உறுதியாகிவிட்ட போதிலும் தேர்தல் களத்தில் நிற்பது தமிழர்களின் ஒற்றுமைக்குப் பாதகமாக அமையும்.

அதேநேரம் நொந்து போய் உள்ள தமிழ் மக்கள் இப்படியும் ஒரு தேர்தலா என்று நினைத்துவிட்டால் வாக்களிப்பில் வெறுப்படைவர்.

இந்த வெறுப்பு தமிழ் மக்களின் எதிர்கால நலனுக்கு ஆரோக்கியமானதல்ல. நிலைமை இதுவாக இருக்கும் போது ஏன் மக்காள் இப்படிப் போட்டி. ஏதோ சிந்தித்துச் செயற்படுங்கள்.

ஆமையைப் பிடிப்பார். மல்லாத்துவார். அதை நாம் சொன்னால் பாவம்.

# மாசிமகத்தின் மகத்துவம்

ஆண்டுதோறும் மாசி மாதத்தில் மகநட்சத்திரமும், பௌர்ணமியும் கூடிவரும் நாள் மாசி மகவிரத வழிபாட்டு நாளாகக் கொண்டாடப்படுகின்றது. பன்னிருவருடங்கட்கு ஒருமுறை குருபகவான் கும்பராசிக்கு வரும் போது பூரணையும் மகநட்சத்திரமும் மாசிமாத்தில் கூடும்போது வரும் சிறப்புமிகு நன்நாள் *மகாமகம்* எனப் போற்றப்படுகின்றது.

இந்துசமயத்தவரின் சிறப்பு விரத வழிபாட்டு நாளான இத்தினம் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டது. இத்தினத்தில் பாரத நாட்டின் புண்ணிய தீர்த்தங்கள் அனைத்தும் சூட்சுமவடிவமாகக் கும்பகோணத்தில் உள்ள மகாமகத்தீர்த்தத்திற் கலக்கின்றன. இந்தப் பெருமைக்குரிய நன்நாளில் பக்தர்கள் தீர்த்தமாடித் தம்முடைய பாவங்களைப் போக்குகின்றனர்.

மாசிமகச்சிறப்புப் பற்றிய வரலாறுகள் பல உண்டு. முன்னொரு காலத்திலே வருணபகவானைப் பீடித்த பிரமகத்தி தோஷம் காரணமாக அவர் சமுத்திரத்தினுள்ளே கட்டுண்டு கிடக்க தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டு வேண்டுதல் செய்யவும் இறைவன் இந்த நன்நாளிலேயே வருணபகவானை மீட்டருள் புரிந்ததாகவும், முன்னொருபோது பிரளயம் ஏற்பட்டு உலகம் முழுவதும் அழியப் போவதை உணர்ந்த பிரம்மா அப்படி அழிவு ஏற்பட்டாற் படைத்தற்தொழிலை எப்படிச் செய்வது என்பதையிட்டுத் துன்புற்றவராக பரமேஸ்வரனிடம் முறையிடவும், எல்லாம் வல்லவரான எம்பெருமான் படைப் பிற்குரியவித்தையையும், பாதுகாக்கும் முறையையும் பிரம்மாவுக்கு அருளினார்.

பிரம்மா இறைவன் அருளியபடி நீரையும், அமிர்தத்தையும் கலந்து மண்ணாற் திருக்குடம் செய்து நூல், தர்ப்பை, மாவிலை,தேங்காய், பட்டுவஸ்த்திரம் என்பவற்றாற் பூரண நிறைகுடமாக்கி சிருஷ்டிக்கருவினை அதனுள் வைத்து பூசனை செய்து மகாமேருமலை உச்சியில் வைத்தார். பிரளயம் ஏற்பட்டபோது அந்த நிறைகுடம் நீரில் அடிபட்டு வந்து தென்னாட்டில் கும்பகோணத்தில் ஒதுங்கியது. குடத்தில் இருந்தனயாவும் பல இடங்களிலும் சிதறிப்பரவிப் பல்வேறு உருவங்களாக முளைவிட்டன.

எம்பெருமான் வேடுவ வடிவந்தாங்கி அம்பு எய்து குடத்தினை உடைத்திடவும் அதனுள் இருந்த அமிர்தம் எங்கும் பரவிடவும், திருக்குட மண்ணை எடுத்துத் தமது தேஜசை அதற்குக் கொடுத்து கும்பகோணத்தில் உருவாக்கிய மூர்த்தியே கும்பனிங்கம், கும்பேசுவரர் எனப்படும் சிவலிங்க அருளுருவாகும்.

கும்பத்தில் இருந்து பரவிய அமிர்தம் தேங்கிய இடங்கள் பொற்றாமரை வாவியாகவும், மகா மகத்தீர்த்தமாகவும் போற்றப்படுவதுடன் இங்கு தீர்த்தமாடுவோர் பாவங்கற் நீங்கி நற்கதி பெறுவதாகவும் நம்பிக்கையுடன் வழிபடப்படுகின்றது.

மேலும் மாசிமக வரலாற்றில் நதி தேவதைகள் தங்களிற் பல்லாயிரம் பேர் வந்து நீராடி அசுத்தப்படுத்துவதால் அவர்களின் குற்றங்கள் தம்மிற் தங்கிவிடுவதாகவும், அவை அகல இறைவன் அருள்புரிய வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளவும் நதி தேவதைகளின் வேண்டுகோளுக்குத் திருவுளங்கொண்ட இறைவன் மாசிமக நன்நாளிற் கும்பகோணத்திற் தீர்த்தமாடித் தூய்மையடைவீர் என நதிதேவதைகளைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மாசிமக நன்நாளிலே நதிதேவதைகள் மகா மகத்திற் தீர்த்தமாடித் தூய்மை பெற்றதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

மேலும் அம்பிகை இறைவனிடம் வேண்டுதல் செய்து தாட்சாயணியாக அவதரித்த நன்நாளும் மாசிமகம் என்பதால் மாசிமகத்தில் அம்பாளுக்கு ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள், விளக்குப் பூசைகள் என்பன செய்து மக்கள் விரதம் அனுஷ்ட்டித்து விழாக்கள் நடாத்துகின்றார்கள்.

இவ் விதமாகப் பல்வேறு சிறப்புக்கள் கொண்ட இந்த மாசிமக நன்நாளில் நாமும் தீர்த்தமாடி வழிபாடுகள் செய்து நற்பேறு அடைவோமாக.

நீர்வை மணி

# இம்முறை பொதுத் தேர்தலில் 22 புதிய தேர்தல் சின்னங்கள் அறிமுகம்

(கொழும்பு)

22 புதிய தேர்தல் சின்னங்களைக் கொண்ட வர்த்தமானி அறிவித்தலைப் பிரசுரிக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் பெருமளவிலான சுயேட்சைக் குழுக்கள் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தமையே இதற்குக் காரணம் என தேர்தல் செயலகம் சுட்டிக்காட்டு கின்றது.

இதுவரை 40 தேர்தல் சின்னங்களே அங்கீகரிக்கப்பட்டிருந்தாகப் பிரதி தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்ரிய தெரிவித்தார்.

தேர்தலை முன்னிட்டு பெப்ரவரி 25 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட ஆயிரத்து 642 இன் கீழ் 25 என்ற இலக்கத்தைக் கொண்ட விசேட வர்த்தமானி மூலம் புதிய தேர்தல் சின்னங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இம்முறை தேர்தலில் சில பறவைகளின் உருவங்கள் சின்னங்களாகப் பயன்படுத்தபடவுள்ளன. மான், நாய், ஒற்றைக் கொம்புக் குதிரை, ஒட்டகம், அணில், கிளி, நாகம் ஆகியனவும் தேர்தல் சின்னங்களாக அறி முகப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள்களும் சின்னங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றைவிட கிணறு, கட்டில், நீர்த்திருகு பிடி, மின்குமிழ், சுத்தியல், கணணி, வாள் ஆகியனவும் இம்முறை தேர்தலில் புதிய சின்னங்களாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பட்டம், தபால்தூண் பெட்டி, சாந்தகப்பை, கரண்டி, பந்து ஆகிய சின்னங்களும் விசேட வர்த்தமானியில் குறிப்பிடப் பட்டுள்ளன. (6)


## கல்முனை- யாழ்ப்பாணத்திற்கான பஸ்சேவை நாளை ஆரம்பம்

கல்முனையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான இரவு நேர பஸ்சேவை நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் கல்முனை இ.பொ.ச. மத்திய பஸ் நிலையத்திலிருந்து மாலை 6 மணிக்கு புறப்படும் பேருந்து காத் தான்குடி, மட்டக்களப்பு, பொலனறுவை ஊடாக யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையத்தை வந்தடையும் எனவும் அப் பேருந்து மீண்டும் மறுநாள் மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கல்முனை நோக்கி புறப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (4-6)

# இயேசுவின் உருமாற்றம்

## விஞ்ஞான விழிப்பு (Awakening)



பிறவித் துன்பத்திற்குக் காரணமான அறியாமை நீங்குமாறு முத்தி என்னும் சிறந்த நிலைக்குக் காரணமான செம்பொருளைக் காண்பதே மெய்யுணர்வு.

ஆம். எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் அறியாமையே (Lgnorance) என்று தத்துவங்கள் அனைத்தும் கூறுகின்றன. இந்த அறியாமை இருவகைப்படுகின்றது. ஒன்று தன்னை பற்றிய அறியாமை மற்றையது தன்னைப் படைத்தவரைப் பற்றிய அறியாமை என்பனவாகும்.

முதலில் தன்னைப் பற்றிய அறியாமையை நோக்குமிடத்து மனிதா!

## பரமபிதா காட்டிய பாதை

உன்னையே நீ அறிந்துகொள் என்று சொன்னான் கிரேக்க தத்துவ ஞானி சாக்ரடீஸ். இன்று ஒவ்வொருவரும் அறியாமை இருளில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தன்னுடைய பிறப்பு ,இறப்பு , வாழ்வின் முடிவு நிலை இவைகளை ஒருவன் நிச்சயம் அறிந்திருக்க வேண்டும். ஆனால் அறிவதில்லை அல்லது அறிந்து கொள்ள விரும்புவதில்லை. இதற்கு காரணங்கள் பயம் , அச்சம் , கோழைத்தனம் , துணிச்சல் இல்லாமை போன்றவையே ஆகும்.

இரண்டாவதாக தன்னைப் படைத்தவரைப் பற்றி அறியாமையை நோக்குமிடத்து மண்ணில் பிறந்தவன் தன்னைப் பெற்றெடுத்த தாயை அறிந்திருக்கவேண்டும். கல்வி கற்றவன் தனக்கு கற்று கொடுத்த ஆசானை அறிந்திருக்க வேண்டும். அதுபோல ஒவ்வொரு படைப்பும் தன்னைப் படைத்தவனை நிச்சயம் அறிந்திருக்க வேண்டும் .அப்படி என்றால் மனிதன் ஒவ்வொரு வனும் தன்னைப் படைத்த பரம் பொருளை அறிந்திருக்க வேண்டும். இங்கு அறியாமையை அகற்றும் வழிகளாக தவம் , செபம் , பற்றழித்தல் , ஆழ்ந்த இறையனுபவம் , ஈவிழிப்பு என்பன குறிப்பிடப்படுகின்றது. ஆம். மேற் கூறப்பட்ட அனைத்து கருத்துக்களும் தான் இன்றைய நற்செய்தியின் மையச் செய்தியாகும். இன்று தவக்காலத்தின் 2 ஆவது வாரத்தில் அடியெடுத்து வைக்கின்றோம். இன்றைய நற்செய்தியில் இயேசுவின் உருமாற்ற நிகழ்வு நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுவின் உருமாற்றம் என்பது அவரது ஞான விழிப்பாக நாம் பார்க்கின்றோம்.

ஆம். இன்று நாமும் இத்தகைய அனுபவத்தை , ஞான விழிப்பைப் பெற்று உருமாற்றம் பெற்ற மக்களாக வாழவேண்டும். அதற்காகத்தான இந்தத் தவக்காலம் கொடுக்கப்பட்டி ருக்கின்றது. நாமும் இந்த தவக்காலத்தில் விழிப்படைந்து , புது மாற்றம் பெற்று , உச்ச இறையனுபவத்தை பெறவேண்டும். அது நம் வாழ்வை மாற்றும் ஒன்றாக அமைய வேண்டும்.

ஜோன் ரொபேர்ட்

# முகாமைத்துவத்தில் மக்கட்பண்பு காத்த உதாரண சிருஷ்டி என்.சிவரத்தினம்



இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என். சிவரத்தினம் அவர்களின் மணிவிழா இன்று. கூடவே அகவை அறுபதைப் பூர்த்தி செய்யும் அவரின் பணி நலன் பாராட்டும் இன்றாகின்றது.

என்.சிவரத்தினம் அவர்களோடு பழகுகின்ற வாய்ப்புகள் பல வருடங்களுக்கு முன்னர் கிடைத்தது.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லிவீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளராக அவர் இருந்தபோது, வங்கியாளர் கை.விக்னேஸ்வரன் அவர்களின் ஏற்பாட்டில் விஜயதசமி விழாவில் உரையாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

அமைதியான -அடக்கமான முகாமையாளராக அவரைச் சந்தித்தேன். இருந்தும், அவரின் ஆழமான அறிவுத் திறனையும் அனுபவத் திரட்சியையும் என்னால் புரிந்து கொள்ளுமளவிற்கு தொடர்பு இருக்கவில்லை.

2008 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக் கழகத்திற்குச் செல்லும் மாண வர்களைக் கௌரவிக்கும் விழாவை ஏற் பாடு செய்திருந்தது.

அன்று தொடக்கம் என்.சிவரத்தினம் அவர்களின் நிர்வாகத்திறனைப் பார்க்கும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது.

தலைவர்கள் பிறக்கிறார்கள், சிறந்த முகாமையாளர்கள் பிறக்கிறார்கள் என்ற ஆரம்பகாலத் தத்துவங்கள் மாற்றமடைந்து தலைவர்கள் - சிறந்த நிர்வாகிகள் உருவாக்கப்படுகிறார்கள் என்ற சிந்தனை மேலோங்கிய போதிலும் என்.சிவரத்தினம் அவர்களை சந்தித்த பின் பழைய தத்துவமாகிய சிறந்த நிர்வாகிகள் பிறக்கின்றார்கள் என்பதே சரியென்ற முடிவுக்கு நம்மை ஈர்க்கின்றது.

**“இதனை இதனால் இவன் முடிவுக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன் கண்விடல்”**

என்பது வள்ளுவன் உலகுக்கு உரைத்த முகாமைத்துவ எண்ணக்கரு.

முகாமைத்துவம் பற்றிய வள்ளுவனின் கருத்து ஏற்புடையதென்பதற்கு இலங்கை வங்கியின் வடக்கு உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரத்தினம் அவர்கள் சாலப் பொருத்துடையவர்.

அமைதியான சுபாவம், ஆழ்ந்தகன்ற நுண்ணறிவு, எதனையும் திட்டமிட்டுத் திறம்படச் செய்யும் ஆற்றல், நிலைமைகளுக்கேற்ப தீர்மானம் எடுக்கும் ஆளுகை எனப் பல்பரிமாண ஆளுமையின் உருவமாக அவரைப் பார்க்க முடியும்.

தனது பதவியின் உயர் பெறுமானத்தை இம்மியளவும் கணக்கெடுக்காமல் எவருடனும் எளிமையாகப் பழகும் பண்பும் எவருடைய கருத்தையும் ஏற்று அதில் இருக்கக் கூடிய திறன் காணும் இயல்பும் சிவரத்தினம் அவர்களின் தனித்துவ அடையாளங்கள்.

இதன் காரணமாக பொறுப்பு வாய்ந்த தனது பணியைத் திறம்பட ஆற்றி - எதிர்கால வங்கியாளர்களுக்கும் ஏனைய நிர்வாகிகளுக்கும் எடுத்துக் காட்டக்கூடிய சான்றாண்மையாளராக அவர் திகழ்கிறார்.



இலங்கை வங்கியின் வடக்கு உதவிப் பொது முகாமையாளர் என்ற எல்லை கடந்து




க. பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்லும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களைக் கௌரவிக்கும் புதிய அத்தியாயமொன்றை இலங்கை வங்கியும் வலம்புரி நாளிதழும் இணைந்து மேற்கொண்டு வருகின்றது. இந்த உயரிய – அனைவராலும் பாராட்டப்பட்ட இக் கௌரவிப்பு நிகழ்வின் முழு உரித்தும் சிவரத்தினம் அவர்களின் சிந்தனையில் உதித்தவை.

வகிக்கின்ற பதவியுடன் மட்டும் நின்றுவிடாமல் அதற்கப்பால் சென்று எங்கள் சமூகத்திற்கும் மாணவர்களுக்கும் எந்தெந்த வகையில் உதவ முடியுமோ அதையெல்லாம் செய்து காட்டிய பெருமை அவருக்குரியது.

சிறந்த எழுத்தாளராக அவரைப் பார்ப்பது பத்திரிகைத் துறையின் பொறுப்பாகிறது.

“மும்பாய் பயணம்” என்ற பயணக் கட்டுரையை வலம்புரியில் அவர் எழுதிய போது வாசகர்கள் மத்தியில் அதற்கு இருந்த வரவேற்பு, அவரின் எழுத்தாளுகையின் திறத்தை சுட்டி நின்றது.

**என். விஜயசுந்தரம்**

எல்லோரையும் மதிக்கும் உயர்பண்பை தனது அணிகலனாகக் கொண்ட சிவரத்தினம் அவர்கள் தனது ஓய்வுக்காலத் தில் தனது எழுத்தாற்றல் திறத்தின் படைப்புகளை எங்கள் இளைய சமூகத்திற்குத் தரவேண்டும் எனவும் இச்சந்தர்ப்பத்தில் கேட்பது பொருத்துடையது. ✠




# மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய தேர்தல் கட்டமைப்பு உருவாக்கப்படும்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களுக்கு அதிக நன்மை அளிக்கக் கூடிய புதிய தேர்தல் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்த வரலாற்றில் முதல் தடவையாக மக்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பதுளை பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் தேர்தல் முறைமையினால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையின்றி அரசியல் சாசனத்தில் திருத்தங்களை ஏற்படுத்த முடியாது எனக் குறிப்பிட்டுள்ள அவர் தேர்தல் முறைமையை மாற்றியமைக்க அரசாங்கத்திற்குத் தேவையான அதிகாரத்தை வழங்க வேண்டியது மக்களின் முக்கிய பொறுப்பாகும் எனத் தெரிவித்துள்ளார். (6)

# பசில் ராஜபக்ஷ தனது சொத்து விபரங்களை வெளியிட்டுள்ளார்

(கொழும்பு)



ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், கம்பஹா மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தலைமை வேட்பாளரு மான பசில் ராஜபக்ஷ தனது சொத்து விபரங்களை வெளி யிட்டுள்ளார்.

கம்பஹா மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியிடம் தனது சொத்து விபரங்களை பசில் ராஜபக்ஷ ஒப்படைத்துள்ளார்.

வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் பசில் ராஜபக்ஷ தனது சொத்து விபரங்களை ஒப்படைத்துள்தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், அதிக எண்ணிக்கையிலான வேட்பாளர்கள் தங்களது சொத்து விபரங்களை வெளியிடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (6)

## யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் முன்னிலை

# 92ஆவது பொன் அணிகள் போர் வெற்றி தோல்வியின்றி முடிபு

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் முன்னிலை பெற்ற போதும் பொன் அணிகள் போர் வெற்றி தோல்வியின்றி முடிபுற்றது.

பொன் அணிகள் போர் என வர்ணிக்கப்படும் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்கும் இடையிலான 93 ஆவது வருட இன்னிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 180 ஓட்டங்களை எடுத்தது.


இதில் ஜே.நிகேதன் 49 ஓட்டங்களையும் எஸ்.சீராளன் 36, எஸ்.நிரோஷன் 31, பிரசோபனன் 17 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் எம்.வி.ஹமில்ரன், எம்.டி.சஜீந்திரன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ஏ.கவாஸ்கர், ஏ.எம். மனோஜ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.











தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 113 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந் நிலையில் இரண்டாவதும் இறுதி நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 122 ஓட்டங்களை எடுத்த நிலையில் 4 ஆவது விக்கெட்டை இழந்தது.

இதில் எம்.வி.கமில்ரன் 144 பந்துகளில் (6 பவுண்டரிகள் அடங்கலாக) 61 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் 5 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த மைக்கல்–மிலாண்டோ ஜோடி நிதானமான துடுப்பாட்டத்தை வழங்கினர்.

இதில் எம்.மைக்கல் தனது அரைச்சதத்தைக்கடந்து அசத்தினார். எனினும் எம்.மைக்கல் 138 பந்துகளில் (6 பவுண்டரிகள் அடங்கலாக) 54 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 74.1 ஓவர்களில் 193 ஓட்டங்களை எடுத்து 5 ஆவது விக்கெட்டை இழந்தது. அடுத்து எஸ்.மிலாண்டோ, ஜெனிபர் 29, அணித்தலைவர் வி.நபதீபன் 24, ஏ.கவாஸ்கர் 33 ஓட்டங்களை எடுத்து பிரகாசிக்க யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 324 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இதில் ஜே.எரிக்ஸ் 19 ஓட்டங்களையும் ஜெ.கிளிங்ரன் 5 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் எம்.டி.சஜீந்திரன் 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் எஸ்.நிரோசன், ஸ்ரீலக்ஸன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ஜே.நிகேதன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 144 ஓட்டங்களை எடுக்க வேண்டிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப் பெடுத்தாடிய யாழ்ப்பாணக்கல்லூரி அணி நிரோசனின் சிறப்பான துடுப்பாட்டத்தின்மூலம் நேற்றைய இறுதி நாள்ஆட்ட நேர முடிவில் 47 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்களை எடுத்தது.

இதன் மூலம் பொன் அணிகள் போர் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்தது. இதில் எஸ்.நிரோசன் 76 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 42 ஓட்டங்களையும் அணித்தலைவர் பி.சிறிகுகன் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் எம்.வி.கமில்ரன் 3 விக்கெட்டுக்களையும் எம்.டி.சஜீந்திரன், ஏ.கவாஸ்கர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியில் சகலதுறையிலும் ஜொலித்த யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் எம்.வி.கமில்ரன் ஆட்டநாயகனாகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் தெரிவானார்.

அத்துடன் யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் எஸ்.நிரோசன் சகல துறைவீரர் விருதையும் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர் எம்.டி.சஜீந்திரன் சிறந்த பந்துவீச்சாளர் விருதையும் அதே அணியின் எஸ்.மிலாண்டோ சிறந்தகளத்தடுப்பாளர் விருதையும் வென்றனர்.

இப்போட்டியில் சிறந்த இணைப்பாட்ட விருதை யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் எஸ்.நிரோசன், ஜே.நிகேதன் தெரிவாகினர்.

## கண்டியில் மனோ கணேசன், கொழும்பில் பிரபா, குமரகுருபரன் உட்பட நாடெங்கும் 9 வேட்பாளர்கள்

## ஜனநாயக மக்கள் முன்னணி தெரிவிப்பு



(கொழும்பு)

கண்டி மாவட்டத்தில் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசனும், கொழும்பு மாவட்டத்தில் பிரபா கணேசன், கலாநிதி ந.குமரகுருபரன் ஆகிய இரண்டு தமிழ் வேட்பாளர்களும், நுவரெலியா மாவட்டத்தில் எம்.பாரதிதாசன், மட்டக்களப்பு மாவட்டத்தில் வி.கணேஷானந்தம், வன்னி மாவட்டத்தில் எம்.ரவிச்சந்திரன், கம்பஹா மாவட்டத்தில் சி.விக்னேஸ்வரன் (ஜெறொம்), களுத்துறை மாவட்டத்தில் ஆர்.மேகநாதன் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தில் எம்.சந்திரகுமார் ஆகியோர் ஜனநாயக மக்கள் முன்னணியின் வேட்பாளர்களாக ஐக்கிய தேசிய முன்னணியின் யானை சின்னத்தில் போட்டியிடுவதாக ஜனநாயக மக்கள் முன்னணி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்கள் இந்நாட்டில் வாழும் நான்கு பிரதான பிராந்தியங்களான வடக்கு, கிழக்கு, மலையகம், மேற்கு ஆகிய அனைத்து பிராந்தியங்களிலும் போட்டியிடும் ஒரே தமிழ் கட்சியாக ஜனநாயக மக்கள் முன்னணி வளர்ச்சி பெற்றிருப்பதை எதிர்வரும் தேர்தல் அடையாளப்படுத்துகின்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா நேற்று ஆரம்பமானது

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் அமைதி திரும்பியுள்ள நிலையில் இந்த ஆண்டு கச்சதீவு திருவிழாவை நடத்த அரசு அனுமதி அளித்துள்ளது. இதையடுத்து யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர், கச்சதீவு திருவிழாவிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கச்சதீவில் நேற்று கொடியேற்றத் துடன் ஆரம்பமான திருவிழா இன்று 28ஆம் திகதி காலை திருப்பலி,தேர்பவனி நிகழ்வுக ளுடன் நிறைவு பெறும்.

கச்சதீவில் நடைபெறும் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் பங்கேற்க இராமேஸ்வரம் சுற்றுப்பகுதி தீவு மக்கள் கூட்டம் கூட்டமாக விசைப்படகு மூலம் புறப்பட்டு சென்ற வண்ணம் உள்ளனர்.

இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரினால் 1978ல் நிறுத்தப்பட்ட கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா 22ஆண்டுகளுக்கு பின் மீண்டும் 2001ல் நடந்தது. தொடர்ந்து இலங்கை அரசின் ஒத்துழைப்புடன் 2005வரை நடந்த அந்தோனியார் திருவிழாவில் மன்னார், நெடுந்தீவு பகுதியிலிருந்தும், இராமேஸ்வரம்,பாம்பன் பகுதிகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர்.

2006இல் இலங்கை இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்தம் உக்கிரமாக நடந்ததால் பாதுகாப்பு கருதி கச்சதீவு திருவிழாவை இலங்கை அரசு நிறுத்தியது.

தற்போது இலங்கையில் அமைதிதிரும்பியுள்ள நிலையில் இந்த ஆண்டு கச்சதீவு திருவிழாவை நடத்த அரசு அனுமதி அளித்துள்ளது. இதையடுத்து யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் கச்சதீவு திருவிழாவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கச்சதீவில் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா இன்று 28ஆம் திகதி காலை திருப்பலி, தேர்பவனி நிகழ்வுகளுடன் நிறைவு பெறும்.

நேற்று காலை இராமேஸ்வரம் ஒட்டிய பாம்பன், மண்டபம், தங்கச்சி மடம் மற்றும் அருகில் உள்ள தீவுப்பகுதி மக்கள் இராமேஸ்வரம் வந்தனர்.நூற்றுக்கணக்கான விசைப்படகுகளில் குடும்பத்தோடு ஆர்வமாக புறப்பட்டுச் சென்றனர்.

இந்திய இலங்கைக் கடற்படையினர் பக்தர்களிடம் சோதனை நடத்துகின்றனர். அடையாள அட்டை முக்கியமாக பரிசோதிக்கப்படுகிறது. இரண்டு நாட்கள் விழாவை முடித்து பக்தர்கள் இராமேஸ்வரம் திரும்புவர். விழாவில் பங்கேற்கவரும் பக்தர்களுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று இலங்கை தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# வாழ்க்கைச் செலவை குறைப்பது தொடர்பில் இரண்டு வாரங்களில் விளக்கமளிக்கப்படும்

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவை எவ்வாறு குறைப்பது மற்றும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவது என்பன குறித்து இரண்டு வாரங்களில் நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

எந்த அடிப்படையில் எவ்வாறு சம்பள உயர்வு வழங்கப்படும் என்பது குறித்தும் தெளிவுபடுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இரத்தினபுரியில் நேற்று நடைபெற்ற சந்திப்பு ஒன்றின் போது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவது மிக முக்கியமான பிரச்சினை அல்ல. அதனைவிடவும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். கடந்த காலங்களில் பாதைகளில் குண்டு வெடித்தன. ஆனால் பொருட்களை கொள்வனவு செய்ய முடியாது வீடு செல்வதனால் இன்று வீடுகளில் குண்டு வெடிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய அரசாங்கம் ஒன்றை தெரிவு செய்ய வேண்டும் எனவும், ஐக்கிய தேசிய முன்னணி மக்களுக்கு பல்வேறு நன்மைகளை வழங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் எதிர்நோக்கி வரும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவது குறித்து ஐக்கிய தேசிய முன்னணி கூடுதல் முனைப்பு காட்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## தமிழ்க்...

அப்ரகாம் சுமந்திரன், எஸ்.கே.சிற்றம்பலம், வேலுப்பிள்ளை சிவயோகம், ஆர்.எம்.இமாம், டேவிட் நாகநாதன், நாச்சியார் செல்வநாயகம், சேனாதிராஜா சிறிஸ்கந்தராஜா,

கந்தையா சர்வேஸ்வரன், குணம் அஞ்சலோ அகிலன், பெரியதம்பி கனகசபாபதி. (ச-5)

## எச்சரிக்கையை மீறிச் சென்ற வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு

எச்சரிக்கையை மீறிச் சென்ற வாகனம் ஒன்றின் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மாத்தளைப் பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சோதனைச் சாவடியில் நிறுத்தாது பொலிஸார் விடுத்த எச்சரிக்கையை மீறிச் சென்ற வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

வாகனத்தில் பயணித்த நபர் உயிரிழந்துள்ளதுடன் வாகனத்தின் சாரதி காயமடைந்துள்ளார். குறித்த வாகனத்தில் பயணித்தவர்கள் மதுபோதையில் இருந்ததாகப் பொலிஸார் அறிவித்துள்ளனர். (ச-5)

## பொன்சேகா...

விரைவில் இராணுவ நீதிமன்...
செய்யப்படுவார்.

இலங்கை அரசை கவிழ்ப்ப...
செய்தமை, இலங்கை இராணு...
யல் மயப்படுத்த முயற்சித்தமை...
குற்றச்சாட்டுக்கள் பொன்சேகா...
பட்டுள்ளதாகவும் பிரசாத் சமரசி...
தார்.

இதேவேளை பொன்சேகா மீ...
டத்தின் அடிப்படையில் வழக்கு...
கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக...
சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ள...

இவ் வழக்கு விசாரணைகள்...
வாரங்களில் மேற்கொள்ளவுள்...
பிடத்தக்கது.

## அரச பயங்கரவாதம் தொடரும்...

களோ அவர்களைத் தாம் ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட பின்னரான கால கட்டத்தில் வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களின் அரசியல் நடவடிக்கைகள் எப்படி அமைய வேண்டும் என்பது குறித்து ஐ.சி.ஜி. எனப்படும் சர்வதேச நெருக்கடிகள் தொடர்பான ஆய்வு மையம் கடந்த சில தினங்களுக்கு முன்பு தனது அறிக்கையில் சில யோசனைகளைப் பரிந்துரை செய்திருந்தது.

அதில் முக்கியமாக வெளி...
இலங்கைத் தமிழர்கள் இனிமே...
தலைப்புலிகளின் வழிமுறைக...
ரிக்க வேண்டும் என்றும் ஐ.சி.ஜி...
கூறியிருக்கின்றது.

இந்த அறிக்கை குறித்தும் அ...
ரைகள் குறித்தும் உலகத் தமிழ...
யின் கருத்து என்ன என்று அத...
அருட்தந்தை இம்மானுவேல்...
மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளா...

## ராஜீவ் காந்தி கொலை...

இது தொடர்பில் இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளதாவது,

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டுஅம்மான் உட்பட பலர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டு கடந்த 20 வருடங்களாக நடைபெற்று வருகின்றது.

தற்போது இவர்கள் இருவரும் தலைமறைவானதையடுத்து, இவர்கள் மீதான வழக்கு தனியாகப் பிரிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றது.

சென்னை முதலாவது தடா நீதிமன்ற நீதிபதி பி.இராமலிங்கம் இந்த வழக்கை விசாரிக்கின்றார். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது சி.பி.ஐ. அதிகாரிகள், வழக்கறிஞர் ஆகியோர் நீதிபதி பி.இராமலிங்கத்திடம் அறிக்கை கொடுத்தனர்.

இந்த வழக்கை நீதிபதி வரும் மே மாதத்திற்குத் தள்ளி வைத்தார். புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டதாக இலங்கை அரசு கூறி வருகின்றது. எனினும் அவரது மரணச் சான்றிதழை வழங்குவதற்குப் பின்னடித்து வருகின்றது.

இந்திய உள்துறை அமைச்சர் பா.சிதம்பரம் ஆதாரங்களை இலங்கை வழங்கிவிட்டதாக அறிவித்திருந்த நிலையில் அதனை சி.பி.ஐ. மறுத்திருந்தது.

அத்துடன் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் பிரபாகரனின் மரணம் குறித்து உறுதியான ஆதாரங்களைச் சமர்பிக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் சி.பி.ஐ. கோரியிருந்தது.

எனினும் இதுவரை அவ்வாறான உறுதியான ஆதாரங்கள் எதனையும் இலங்கை வழங்கவில்லை எனத் தெரிய வருகின்றது. இந் நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணையில் இருவரும் தலைமறைவாக இருப்பதாகக் கருதப்பட்டு வழக்கு மேலும் இரண்டு மாதங்களுக்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## புலம்பெயர் தமிழ்ச் சமூகத்...

இலங்கையில் நடைபெற்று வந்த துன்பமான போரை ஆராய்ந்து வந்துள்ளேன்.

இடம்பெயர்ந்த மக்களின் நெருக்கடிகள் தொடர்பாகவும் போரின் பின்னரான அபிவிருத்திகள் குறித்தும் நாம் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம்.

போருக்குப் பின்னரான நடவடிக்கைகளில் இலங்கையில் தொடர்ந்து ஒரு காத்திரமான பங்களிப்பை வழங்க நாம் ஆவலாக உள்ளோம்.

இலங்கை போரில் இருந்து மீண்டு வருகையில் நாட்டுக்கு வெளியில் உள்ள தமிழ்ச் சமூகம் அதன் முன்னேற்றங்களில் கணிசமான பங்களிப்பை வழங்க வேண்டும்.

இலங்கையின் ஜனநாயக வழிகளுக்கு ஆதரவளிக்கும் உலகத் தமிழர் பேரவைக்கு நான் நன்றி கூற விரும்புகின்றேன். குறிப்பாக நாட்டின் நெருக்கடியான சமயத்தில் அவர்கள் இதனை மேற்கொண்டுள்ளனர்.

போர், பயங்கரவாதம், வன்முறைகள், அரசியல் அடக்கு முறைகள் போ...
விடுத்து இலங்கை மக்கள் அ...
ஒருங்கிணைந்து ஒரு பொது வே...
தின் கீழ் பணியாற்றுவார்கள் என...
புகின்றேன்.

அமெரிக்காவைத் தளமாகக்...
தமிழ் மக்களின் அரசியல் செயற்...
யின் பணிகளையும் நான் பாராட்...
இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்...
மனிதாபிமான நெருக்கடிகள் குறி...
யுலகின் கவனத்திற்கு அவர்கள்...
வந்துள்ளதுடன் அமெரிக்க கொள்...
பாளர்களுக்கும் அதனை உண...
னர்.

நாம் தொடர்ந்து இணைந்து...
வேண்டும் என விரும்புகின்றேன்...
யாவில் நடைபெற்ற உலகத் தமிழ...
யின் வெற்றிக்கு எனது வாழ்த்து...
அவர் தனது அறிக்கையில் தெ...
ளார்.

## வன்னி...

ஜனநாயக முன்னணியும் நேற்று வேட்பு மனுவைத் தாக்கல் செய்திருந்தது. இவ்விரு கட்சிகளும் இருளன் ஜெயந்தி என்பவரின் பெயரே முதன்மை வேட்பாளராகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் கட்சியின் செயலாளர் கையொப்பம் இட்டிருக்கவில்லை. இவற்றின் காரணமாக இக் கட்சிகளினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. (ச-5)

## வெளி...

களைப் பறிப்பதற்கு முயற்சிக்கின்றார்.

பிரித்தானியா, நோர்வே உள்ளிட்ட சில நாடுகள் இலங்கையின் உள் விவகாரங்களில் தலையீடு செய்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் பிரித்தானியாவில் நடைபெற்ற உலகத் தமிழர் பேரவை மாநாட்டில் பிரித்தானிய வெளிவிவகாரச் செயலாளர் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)


புதியபிரிவுகள் ஆரம்பம்

Advanced Dip. in Video mixing
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Graphics Design
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01 → 09வரை)
Group Classes

Morph
Cool3d
Project
Premiere
Soundfroge
Combustion
Power director
Vcd and convertor
Editing using Photoshop




முழுமையான கணனிக் கல்விக்கு இன்றே எம்முடன் இணையுங்கள்...

CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903



யாழ். மக்கள் அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க

வலம்புரியின்

திருமண தரிசனம்

உங்கள் வலம்புரியில் ஞாயிறு தோறும் வெளிவரும்.
எங்கள் உறவுகளின் வெளிநாட்டு தொடர்புக்காக
இணையத்தளத்திலும் திருமண தரிசனம் வெளிவரும்.

அன்பார்ந்த பெற்றோர்களே! உங்கள் பொறுப்பை இலகுவாக்க
வலம்புரியின் சேவையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



தொடர்பு:
நேரில்
இல. 3,2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.02. 2010 இல் அச்சிட்டு வெளியிட...